பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 14 வியாழக்கிழமை 31.08.2023 கதிர் 293

# காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது அபிவிருத்திக்கு அவசியம்

## ஐ.நா. நேற்று அறிக்கை மூலம் வலியுறுத்து



வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்கான முயற்சிகளை ஆட்சியாளர்கள் துரிதப்படுத்தவேண்டும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இலங்கையின் பேண்தகு அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்திற்கு அவசியமாகும்.

இவ்வாறு ஐக்கிய நாடுகளின் சபையின் இலங்கைக்கான நிரந்தரவதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ரூ பிரான்ஸ் தெரிவித்துள்ளார் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

சில தினங்களுக்கு முன்பு இனிஇது இரகசியமில்லைப் பகுதியில், இந்தியா - இலங்கை இடையே பாலம் அமைப்பது தொடர்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆற்றிய உரையின் பின்னால் நடந்த விடயங்கள் குறித்து எழுதியிருந்தேன். அதில் நண்பர் ஒருவர் தெரிவித்த கருத்தையும் கூறியிருந்தேன். அது பற்றி விஜேன் என்கிற வாசகர் எழுதியிருப்பவற்றை இன்று அப்படியே தருகின்றேன். இதில் தெரிவிக்கப்பட்டுள்ள பல விடயங்கள், அப்படி நடந்தவைகள்தானா என்று உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் அல்ல. ஒரு வாசகரின் கருத்து என்கிற அடிப்படையில் தரப்படுபவை மட்டுமே.

உங்கள் நண்பர் ஒருவர் இந்தியாவைக் கரிந்து கொட்டியதை குறிப்பிட்டு அதற்கான தங்களது சரியான பதிலையும் தெரிவித்து இருந்தீர்கள். இது சம்பந்தமாக நானும் சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

இந்தியா வலுக்கட்டாயமாக இளைஞர்களை இழுத்துச் ☞ 2

# அமெரிக்கா தொடர்ந்து ஒத்துழைக்கும்

நாட்டின் அனைத்துக் குடிமக்களையும் உள்ளடக்கிய நிர்வாகத்தை ஊக்குவிப்பதற்கும், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் கூட்டாண்மைக்கான சவால்கள் மற்றும் வாய்ப்புகள் ஆகிய விடயங்களிலும் அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்று அறிவித்துள்ளது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க செனட் உறுப்பினர் கிறிஸ் வென் ஹொலன் நேற்று கண்டி ஜனாதிபதி மாளி ☞ 2

# சர்வதேசத்தின் மனச்சாட்சியைத் தட்டி மீண்டும் ஒரு தடவை நீதி கேட்கிறோம்

## வடக்கு கிழக்கு காணாமலாக்கப்ட்டோரின் உறவுகள் அறிக்கை

மீண்டும் ஒரு தடவை சர்வதேசத்தின் மனச்சாட்சியை தட்டி நீதி கேட்கிறோம் என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையிலயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலகிலே அதிகூடிய மனிதர்களை காணாமல் ஆக்கிய நாடுகளின் பட்டியலில் இரண்டாவதாக உள்ள நாட்டிலே வாழ்ந்து கொண்டு, வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதிக்காக 2383 நாட்களாகப் போராடும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆகிய நாங்கள் இந்த சர்வதேச காணாமல் ☞ 2

# பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கியே அனைத்தும் முன்னெடுக்கப்படுகின்றன

## மகாநாயக்கர்களிடம் ஜனாதிபதி தெளிவுபடுத்தல்



பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கும் வகையிலேயே நான் அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றேன். பௌத்த மத தலங்கள் அனைத்தையும் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்புகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். வடக்கில் குருந்திவிகாரையின் பிரச்சினையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். குறித்த பகுதிக்கு வெளிப்பிரதேசங்களிலிருந்து எவரையும் அழைத்துவரவேண்டாம் என அப்பகுதி சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களுக்கு ☞ 2

# சம்பந்தனுடன் ஐ.நா. பிரதிநிதி நேற்று நேரில் சந்தித்து பேச்சு



இலங்கைக்கான ஐ.நாவின் புதிய வதிவிடப் பிரதிநிதி மார்க் என்ட்ரோ பிரெஞ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நேற்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பில் காணாமலாக்கப்பட்டவர்கள் விவகாரம் மற்றும் இலங்கையின் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அதேவேளை, வடக்கு - கிழக்கில் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியிடம் சம்பந்தனும், சுமந்திரனும் எடுத்துரைத்தனர்.

# நாணய நிதிய மீளாய்வுகுழு செப். 14 கொழும்பு வருகை

சர்வதேசநாணயநிதியம் இலங்கைக்கு வழங்கியுள்ள 2.9 பில்லியன் டொலர்கள் நீடித்த கடன்வசதியின் இரண்டாவது தவணையை விடுவிப்பதற்கு முன்னதாக இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் குழு செப்டம்பர் 14 கொழும்பு வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழுவினர் செப்டம்பர் 27 வரை நாட்டில் தங்கியிருப்பார்கள்.

சர்வதேச நாணய நிதியம் வழங்குகின்ற நீடித்த கடன் வசதி தொடர்பில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய, இலங்கை அவற்றை நடைமுறையில் நிறைவேற்ற வேண்டியுள்ளது.

ஜூலை மாத இறுதியளவில் இந்த இலக்குகளில் 35 வீதமானவற்றை மாத்திரமே இலங்கை நிறைவேற்றியிருந்ததாக வெரிட்டே ரிசேர்ச் நிறுவனம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அதேநேரம், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்கான திட்டமொன்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் உள்ளிட்ட ஊழியர் ஓய்வு நிதியங்களின் திறைசேரி முறிகள் ஊடாக ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடனை மறுசீரமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அந்த முறிகளை மீண்டும் புதிய முறிகளாக விநியோகிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. புதிய முறிகளுக்காக 2025ஆம் ஆண்டு வரை 12 வீத வட்டியும் அதன் பின்னர் 9 வீத வட்டியும் வழங்கப்படுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆட்சியாளர்களின் ☞ 2

# கோதுமை இறக்குமதிக்கான அனுமதிப்பத்திர முறை நீக்கம்

கோதுமை மா இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரமுறை நேற்று நள்ளிரவுமுதல் நீக்கப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் திரு.ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அனுமதிப்பத்திர முறை நீக்கப்பட்டதை அடுத்து இனி யார் வேண்டுமானாலும் கோதுமை மாவை இறக்குமதி செய்யக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. அதேநேரம், கோதுமை மா இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட வரி கிலோ ஒன்றுக்கு 16 ரூபாவிலிருந்து 27 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது .இதன் காரணமாக கோதுமைமாவின் விலையில் அதிகரிப்பு ஏற்படாது எனவும் அமைச்சர் தெவித்துள்ளார்.

# ஒலுவிலில் முதலீடு செய்ய தென்கொரியா விருப்பம்

தென்கிழக்கு நகரமான ஒலுவிலில் அமைந்துள்ள துறைமுகப்பகுதியில் கடற்றொழில்சார்ந்த முதலீடுகளை மேற்கொள்வதில் தென்கொரிய வர்த்தகர் ஒருவர் ஆர்வமான இருக்கிறார் என்று மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தென் கொரியாவின் முன்னணி வர்த்தகர்களில் ஒருவரான கங் இது தொடர்பில் தன்னோடு கலந்துரையாடினார் என்றும் அவர் தெரிவித்தார். கடற்றொழில் அமைச்சில் செவ்வாய்க்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதுதொடர்பில் அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் மீன்களுக்கான உணவு, கடலுணவு உற்பத்திதொழிற்சாலை மற்றும் மீன்பிடிபடகுதொழிற்சாலை ஆகிய துறைகளில் முதலீடு செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் கிழக்கு மாகாணத்தின் ஒலுவில் கடற்றொழில் துறைமுக வளாகத்தில் இத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவிரும்புவதாகவும் கங் அமைச்சரிடம் சுட்டிக் காட்டினார்.

தொடரந்து ☞ 2

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியை தோண்டும் பணி செப். 4 தொடங்கப்படுமா?

## பொலிஸாரின் கடைசி நேர கோரிக்கை தாமதப்படுத்தலாம் என எதிர்பார்ப்பு

(ந.லோகதயாளன்.)

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணியை செப்டெம்பர் 4 மீண்டும் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் இன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள கோரிக்கை மனு காரணமாக அது தாமதிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முல்லைத்தீவுமாவட்டம், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு இன்று முல்லைத்தீவு நீதிமன்றில் விசாரணைக்கு வருகின்றது. அப்போது, இந்த விசாரணைகளில் சிங்கள சட்ட மருத்துவ அதிகாரிகள் சிலரையும் இணைத்துக்கொள்ளவேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைப்பதற்கான நகர்வுகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் என்று காலைக்கதிர் அறிந்தது.

இந்த வழக்கு விசாரணையில் நீதிபதி, சட்டத்தரணிகள், சட்டமருத்துவ அதிகாரிகள் என பல தரப்பினரும் தமிழர்களாகவே இருக்கும் காரணத்தால், சிங்களச் சட்டவைத்திய அதிகாரிகள் சிலரையும் இந்த வழக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்கிற நிலைப்பாட்டிற்குப் பொலிஸார் வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்காக சில சிங்கள சட்ட வைத்திய அதிகாரிகளுடன் பொலிஸார் ஏற்கனவே ☞ 2

# மத வன்முறையையும் தமிழர் மீது இன்று கட்டவிழ்த்து விடுகின்றனர்

## மாவை சேனாதிராசா ஆதங்கம்

தமிழர்கள் மீது மத வன்முறைகளை இந்த ஆட்சியாளர்கள் ஏவிவிடுகின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா.

தமிழர்கள் மீது இன ரீதியான முரண்பாடுகளை ஏற்படுத்தி வந்த பேரினவாத அரசு இப்போது மத ரீதியான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றது என்றார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்.

இலங்கை தமிழரசு கட்சியின் கிளிநொச்சி மாவட்டக்கிளையின் நிர்வாக தெரிவு நேற்று கிளை அலுவலகம் அமைந்துள்ள 'அறிவகம்' இல்லத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டிருந்த மாவை சேனாதிராசா, மாவட்டக் கிளையின் புதிய நிர்வாகத் தெரிவை நடத்தி வைத்தார்.

இந்தநிகழ்வில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் குருகுலராஜா மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள், மாவட்டக் கிளை நிர்வாகத் தினர் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சென்று பயிற்சி அளிக்கவில்லை. நமது இளைஞர்கள்தான் காலத்தின் தேவை கருதியும் உணர்ச்சி வசப்பட்டும் இந்தியா சென்றனர். ஆனால் இந்தியா எக்காலத்திலும் தனி ஈழம் அமைத்துக் கொடுக்க கனவிலும் நினைக்கவில்லை. ஏன் எம்.ஜி.ஆர். கூட ஒரு முறை, பாண்டிபஜார் துப்பாக்கி சண்டையின் பின் கேட்டார் "எங்களை கேட்டா போராட்டத்தை தொடங்கினார்கள்" என்று.

1983 இனக்கலத்தின் போது, இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி நரசிம்ம ராவை கொழும்புக்கு அனுப்பி வைத்திராவிடின் தமிழர்கள் இன்னும் பல அழிவுகளை சந்தித்திருப்பார்கள். அவ்வாறே மற்றொரு பிரதமரான ராஜிவ்காந்தி 1987இல் விமானங்கள் மூலம் உணவுப் பொருட்கள் போட்டிராவிடின், வடமராட்சியில் ஆரம்பித்த ஒப்பரேசன் லிபரேசன் (Operation Liberation), யாழ்ப்பாணத்துக்கு பெரும் அழிவையும், புலிகளுக்குப் பெரும் பின்னடைவையும் ஏற்படுத்தி இருக்கும்.

ஜே.ஆர். விரித்த தந்திர வலையில் விழுந்து இந்திய ராணுவத்துடன் மோதல் தொடங்கியிராவிடின் இன்று நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக ராஜீவ் காந்தியின் கொலையானது முழு நிலமையையும் தலை கீழாக மாற்றியது. ஆதரவு நல்கிய ஒரே ஒரு நாடும் எதிரியாக மாறியது. போதாக்குறைக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டம் ராஜீவ் காந்தி கொலையைப் பட்டாசு வெடித்துக் கொண்டாடியது. பத்திரிகையாளர் சத்தியமூர்த்திகூட காலைக்கதிர் பத்திரிகையில் எழுதிய தனது கட்டுரை ஒன்றில் இனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய இராணுவம் இருந்தபோது திருகோணமலையில் உள்ள பல சிங்களக் குடியேற்றங்கள் வெளியேற்றபட்டன. இன்றோ, கோணேஸ்வரர் கோவில்கூட பறி போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சிங்கள மக்கள் வாழாத இடங்களிலும் விகாரைகள் திட்டமிட்டு எழுப்பப்பட்டுள்ளன. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான பகையை ஓரங்கட்டி இந்திய இராணுவத்தை வெளியேற்றத் துணைபோனபின்னர் இறுதிப் போரின்போது மீண்டும் இந்தியா வந்து காப்பாற்றி இருக்கவேண்டும் என்று நம்மவர்களின் நினைப்பு வெட்கக்கேடு.

இறுதிப் போருக்கு உசுப்பி விட்டது புலம்பெயர் அமைப்புக்களும் தமிழ் நாட்டில் உள்ள சில வங்குரோத்து அரசியல்வாதிகளும்தான். பணம் வந்தால் மட்டும் போதும் பூகோள அரசியல் நிலைமைகளைபற்றிகவலை இல்லை என்ற வைராக்கியம் முற்றிலும் தவறாகியது. வீரம் மட்டும் போதும் விவேகம் கிஞ்சித்தும் வேண்டாம் என்ற வறட்டுப் பிடிவாதம்தான் இறுதியில் போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் பேரழிவை ஏற்படுத்தியது.

ஈழத்தமிழர்களைப்போல் இத்தனை அறிவு ஆற்றல் பணபலம் , புலம்பெயர் மக்களின் ஆதரவு இல்லாத தென் சூடான் மற்றும் கிழக்கு திமோர் போன்ற நாடுகள் தனிநாடாக விடுதலை அடைந்துவிட்டன. நமக்கு மட்டும் ஏன் இந்தச் சாபக்கேடு? ஒற்றுமை இன்மை, தலைமைப் பித்து, பூகோள அரசியல் அறிவின்மை மற்றும் நடைமுறை சாத்தியமற்ற இலக்குகளும் கோரிக்கைகளும்தான் நம்மை மேலும் மேலும் பின்தள்ளி உள்ளன.

நம்மவர்கள் சிலர் இந்தியாவைக் கரிந்துக் கொட்டுவதை விடுத்து இவற்றைப் பற்றி சுய பரிசோதனை செய்வார்களாயின் இனியாவது ஈழத்தமிழர்களுக்கு விடிவு பிறக்கும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## காணாமலாக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிந்து காணாமலாக்கப் பட்டவர்கள் தொடர்பான சர்வதேச தினத்தினை முன்னிட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உலகம் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோருக்கான சர்வதேச தினத்தை குறிக்கும் நிகழ்வுகளில் ஈடுபட்டுள்ள அதே வேளை இந்த ஈவிரக்கமற்ற குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் அன்புக்குரியவர்கள் எப்படி உள்ளனர் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியமுடியாத வேதனையை அனுபவித்தவர்கள் குறித்து எங்கள் சிந்தனைகள் திரும்புகின்றன.

இந்தத்தினம் இலங்கையில் ஆழமான பிரதிபலிப்புகளை கொண்டுள்ளது இங்கு பல வருடங்களாக பல குடும்பங்களும் சமூகங்களும் நிச்சயமற்ற தன்மை மற்றும் துயரத்தை எதிர்கொண்டுள்ளதுடன் பதில்கள் அற்ற கேள்விகளின் நிழல்களில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

வலிந்து காணாமலாக்கப்படல் என்பது நாட்டின் வரலாற்றின் துயர்படிந்த கறையை விட்டுச்சென்றுள்ளது, நிச்சயமற்ற நிலையில் வாழும் ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்க்கையை தீர்மானிக்கின்றது. அவர்களின் அன்புக்குரியவர்கள் இல்லாத -நிச்சயமாக இல்லை என கருதமுடியாத நிலை காணப்படுகின்றது.

கடந்த தசாப்தத்தில் சிறிதளவு முன்னேற்றம்கூட ஏற்படாத நிலையில் தங்கள் அன்புக்குரியவர்களின் நிலையை, அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதை அறிவதற்கு இலங்கையின் குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கின்றன.

பதில்களுக்கான அவர்களின் தளர்ச்சியற்ற நீடித்த தேடல்கள் அவர்கள் மேலும் பழிவாங்கப்படும், அச்சுறுத்தப்படும் களங்கப்படுத்தப்படும் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் நிலையை உருவாக்கியுள்ளது.

சமீப வருடங்களில் இலங்கை பலவந்தமாக காணாமல்போதலின் பாரம்பரியத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்காகச் சில முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2015 இல் ஐசிபிபிஈடி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது - காணாமல்போனோர் அலுவலகத்தை ஏற்படுத்தியது - இவை மைல்கற்களாகும்.

காணாமல்போனவர்கள் குறித்து காணாமல்போனவர்கள் அலுவலகம் பெற்றுக்கொண்டுள்ள, வெளியிட்டுள்ள முறைப்பாடுகள், நீதியை வழங்குவது தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களிற்கான எங்களின் அளவுகோல்களாக காணப்படுகின்றன. எனினும் உண்மை நீதி மற்றும் இழப்பீடு போன்றவற்றிற்கான பாதிக்கப்பட்டோரின் உரிமை தொடர்பில் இன்னமும் அதிகளவு செயற்பாடுகள் அவசியமாக உள்ளன.

பாதிக்கப்பட்டவர்களின் நிலை அவர்கள் எங்கிருக்கின்றார்கள் போன்றவற்றை அறிந்து கொள்வதற்கான முயற்சிகளை ஆட்சியாளர்கள் துரிதப்படுத்தவேண்டுமென நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

துயரத்தை எதிர்கொண்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கவேண்டும் குற்றவாளிகளை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்த வேண்டும் எனவும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

உண்மையை நிலைநாட்டுவது பாதிக்கப்பட்டவர்கள், உயிர்பிழைத்தவர்கள் குடும்பத்தவர்களுக்கு மிகவும் அவசியமான விடயம். இதன் மூலம் மாத்திரமே காயங்களை ஆற்றும் நடவடிக்கை தொடங்க முடியும், நல்லிணக்க செயற்பாடுகள் தொடங்க முடியும்.

ஐக்கிய நாடுகள் வலிந்து காணாமலாக்கப்படுதலினால் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பத்தவர்களுக்கு தொடர்ந்தும் தனது ஆதரவை வெளியிடுவதுடன் உண்மை, நீதி, நல்லிணக்கத்திற்காக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மேற்கொண்டுள்ள போராட்டங்களிற்கும் தனது ஆதரவை வெளியிடுகின்றது.

நாங்கள் இன்றைய நாளை குறிக்கும் அதே வேளை வலிந்து காணாமலாக்கப்படுதல் என்பது கடந்த காலத்தின் ஒரு விடயமாக மாறுவதை உறுதி செய்வதற்கான எங்கள் அர்ப்பணிப்பை புதுப்பித்துக் கொள்வோம்.

நாங்கள் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளிற்காக குரல்கொடுப்போம், நீதியின் கொள்கைகளை நிலைநிறுத்துவோம், எந்த குடும்பமும் நிச்சயமற்ற நிலையில் வாழத எதிர்காலத்தை உருவாக்குவோம்.

வலிந்து காணாமலாக்கப்படுதல் குறித்த பாரம்பரியத்திற்கு தீர்வைக் காண்பது வெறுமனே நீதியுடன் தொடர்புபட்ட விடயம் மாத்திரமில்லை முன்னேற்றம் பேண்தகு அபிவிருத்தி போன்ற பாதையை இலங்கை உருவாக்குவதற்கும் மிகவும் அவசியமானது என்றுள்ளது.

இதேவேளை, காணாமலாக்கப் பட்டோருக்கான சர்வதேச தினமான நேற்று வடக்கு கிழக்கில் பெருமெடுப்பில் போராட்டங்கள் இடம்பெற்றன.

காணாமலாக்கப் பட்டவர்களுக்கு நீதியை வலியுறுத்தி யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இந்தப் போராட்டங்கள் இடம்பெற்றன. மன்னார் மற்றும் மட்டக்களப்பில் பெருமளவு மக்கள் ஒன்று திரண்டு பேரணிகளையும் நடத்தினர்.

மட்டக்களப்பு போராட்டம் கல்லடிப் பாலத்திலிருந்து தொடங்கி நகரின் மையத்தில் உள்ள காந்தி பூங்காவில் நிறைவடைந்தது.

## அமெரிக்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகலரத்நாயக்க, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டனர்.

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் திட்டத்திற்கு உள்ளூரில் கடும் எதிர்ப்பும் போராட்டங்களும் கிளம்பியுள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வுக் குழு வருகை தரவுள்ளது.

## கொக்குத்தொடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசியுள்ளனர் என்றும் அறிய முடிந்தது.

ஆனால், இந்த வழக்கில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளாக ஏற்கனவே சிங்களவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்று இந்த விடயத்தைக் கூர்ந்து அவதானித்துவரும் மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதற்கிடையில் மனிதப் புதைகுழியைத் தோண்டுவதற்கான முதற்கட்ட நிதி முல்லைத்தீவு பிரதேச செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டதை அடுத்து செப்டெம்பர் 4 தோண்டும் பணியைத் தொடங்குவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன.

பொலிஸாரினால் திட்டமிட்ட வகையில் புதிய கோரிக்கைகள் எவையும் முன்வைக்கப்படாவிட்டால் திட்டமிட்டபடி தோண்டும் பணிகள் தொடங்கும். இல்லையேல், பொலிஸாரின் கோரிக்கை ஆராயப்பட்டு அதற்குரிய தீர்வு காணப்பட்டதன் பின்னரே தோண்டும் பணிகள் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## பௌத்தத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர் ஆனமடுவே தம்மதிஸ்ஸ தேரரை செவ்வாய்க்கிழமை சந்தித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதார நிலைமையைப் பார்க்கும் போது, வங்குரோத்து நாடு என்ற நிலையிலிருந்து நாம் மீண்டு வருகின்றோம். வெளிநாட்டு கடன் நீடிப்பு வேலைத்திட்டத்தின் தொடர்ச்சியாக நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான வேலைத் திட்டங்கள் பலவற்றையும் ஆரம்பித்துள்ளோம்.

இன்று வங்கிகள் நெருக்கடிநிலையில் இருக்கின்றன. அதனால் வங்கிகளிடமிருந்து பணம் பெற்றுக்கொள்வது கடினமாகியுள்ளது. அனைத்து உள்நாட்டு வங்கிகளும் கடன் நெருக்கடியில் சிக்கியுள்ளன. வங்கிக் கட்டமைப்பு சரிவடைந்தால் நிதி நெருக்கடி ஏற்படும். அதனையடுத்து சேமலாப நிதியத்திலிருந்து மத்திய வங்கி கடன் பத்திரங்கள் பெறப்பட்டுள்ளன. அதனை நீண்டகால பிணைமுறிகளாக மாற்றியமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அதனால் வழங்கப்படும் வட்டி வீதத்தில் சிறிய மாற்றம் ஏற்படும். அதனால் வைப்பாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாது. கடந்த வருடத்தில் சேமலாப நிதியத்தின் வைப்பாளர்களுக்கு 9 சதவீத குறைந்தபட்ச வட்டி வீதத்தை பெற்றுக்கொடுப்பதாக உறுதியளித்தோம். குறைந்த பட்ச வட்டி வீதத்தை சட்டமாகவும் நிறைவேற்றியுள்ளோம்.

அதேபோல் கடன் வழங்கிய ஏனைய நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளோம். புதிய மத்திய வங்கிச் சட்டமொன்றை கொண்டுவரவும் எதிர்பார்த்துள்ளோம். அதன் பின்னர் தனியார் கடன்கள் பற்றி பேசப்படும். அதன்போது கடனில் ஒரு தொகையை குறைத்துக்கொள்ளல் அல்லது கடன் செலுத்துவதற்கான கால நீடிப்பொன்றைக் கோர எதிர்பார்த்துள்ளோம்.

அது தொடர்பிலான கலந்துரையாடல்களை ஒக்டோபர் முதல் வாரமளவில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி வங்குரோத்து நிலையிலிருந்து நாம் மீண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளை சீராக முன்னெடுக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

இலங்கையின் இறக்குமதியை விடவும் ஏற்றுமதி குறைவாக உள்ளது. அதனால் போட்டித்தன்மை மிக்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நாம் எதிர்பார்த்துள்ளோம். அதற்கமைய ஏற்றுமதிப் பொருளாதாரம் ஒன்றை கட்டமைக்க வேண்டும். பிராந்தியத்திற்குள் பொருளாதார ரீதியான பலன்களை அடைந்துகொள்ள முடியும். அதன் பின்னர் கடன் மீள்செலுத்துகைக்கான திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டும்.

1948 இல் பிராந்தியத்தில் எமக்கு கிடைத்திருந்த இடம் தற்போது இல்லாமல் போயுள்ளது. அதனால் எதிர்காலம் தொடர்பில் அவதானம் செலுத்தி அதற்கு பொருத்தமான கல்வி முறையொன்றை தயாரிப்பது தொடர்பில் ஆராயவேண்டும். ஆரம்பத்தை மாத்திரமே என்னால் ஏற்படுத்த முடியும். அந்த வேலைத்திட்டத்தை எதிர்காலத்திலும் முன்னெடுத்துச் செல்ல இந்நாட்டு இளம் சந்ததியினர் முன்வர வேண்டும்.

அதற்கான தலைமைத்துவத்தை நாம் வழங்க வேண்டும். புதிய தெரிவுடன் தொழில்நுட்பத்துடனும் முன்னோக்கிச் செல்லக்கூடிய தலைமுறையைக் கட்டியெழுப்ப வேண்டும். இன்று செயற்கை நுண்ணறிவு பற்றி முழு உலகமும் பேசிக்கொண்டிருக்கிறது. அதேபோல் புத்த தர்மம் பற்றியும் பேசப்படுகிறது. தேரவாத பௌத்த நாடுகள் எவையும் முன்னேற்றம் பெறவில்லை. தாய்லாந்துடன் ஒப்பிடும்போது இலங்கை பின்னணியிலேயே உள்ளது. இலங்கையும் தாய்லாந்தும் முன்னேற்றம் காண வேண்டும். தாய்லாந்துடனான புதிய வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடுவது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளோம்.

அதனால் தேரவாத நாடுகள் இரண்டும் முதன்முறையாக ஒன்றுபடும். அடுத்த வருடத்தின் பெப்ரவரி அல்லது மார்ச் மாதமளவில் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட தாய்லாந்து அரசாங்கத்திடம் கோரியுள்ளேன். அதனை வரலாற்று சிறப்புமிக்க கண்டி நகரத்தில் கைச்சாத்திடுவதற்கான இயலுமை தொடர்பில் மகாநாயக்க தேரர்களிடத்தில் வினவினேன். அது சிறந்ததொரு ஆரம்பமாகும்.

விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவும் நாம் எதிர்பார்த்துள்ளோம். அதனால் ஹெக்டயாருக்கு 7-8 டொன்கள் வரையிலான உற்பத்தித் திறன் கிட்டும். அவுஸ்திரேலியா ஒரு ஹெக்டெயாரில் 10 டொன் நெல் உற்பத்தியைசெய்கிறது. எமது நாட்டின் ஹம்பாந்தோட்டை போன்ற பகுதிகளில் 11 மெற்றிக் டொன் நெல் விளைச்சல் பெறப்படுகின்றன.

அதேபோல் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கும் வகையிலேயே நான் அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றேன். பௌத்த மத தலங்கள் அனைத்தையும் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்புகளை நாம் மேற்கொண்டுவருகின்றோம். வடக்கில் குருந்திவிகாரையின் பிரச்சினையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். வெளிப்பிரதேசங்களிலிருந்து எவரையும் அழைத்துவர வேண்டாம் என அப்பகுதி சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் அப்பகுதி மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்துள்ள நிலையில் வெளியிலிருந்து வந்த குழுவினரே முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளனர். அது தொடர்பில் வவுனியா மகாநாயக்க தேரரையும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அதனால் நாம் வெளியிலிருந்து அந்த பிரதேசத்திற்கு செல்வதற்கு எவரையும் அனுமதிப்பதில்லை. அது தொடர்பிலான விடயங்களை கண்டறியுமாறு தொல்பொருளியல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் சட்டத்திற்கு அமைய செயற்படுமாறும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் மகா விகாரையில் அகழ்வுகளை மேற்கொள்ளவும் எதிர்பார்த்துள்ளோம். வடக்கில் இடம்பெறும் அகழ்வுகளின் அறிக்கைகளை பெற்றுக்கொண்டு அந்தப் பணிகளை முன்னெடுப்போம்.

முன்னைய அரசு இராணுவத்தின் உதவியுடன் அகழ்வுகளைத் துரிப்படுத்தியதாகக் கூறினீர்கள். இருப்பினும் அந்த ஆய்வு முடிவுகள் இன்னும் கிடைக்கவில்லை. தொல்பொருள் திணைக்களம் வழங்கும் தீர்மானத்துக்கு அமைய செயற்பாடுகளை முன்னெடுக்க நாம் எதிர்பார்த்துள்ளோம். அந்தப் பகுதிகளைப் பாதுகாக்கவும் நாம் எதிர்பார்த்துள்ளோம்.

பௌத்த தலங்களை பாதுகாக்கும் அதேநேரம் முதலில் தொல்பொருளியல் ஆய்வுகளை மேற்கொண்டு அப்பகுதிகளில் மற்றைய மதம் சார்ந்த பிரச்சினைகள் இருக்குமாயின் அதுபற்றி ஆராயவும் தயாராக வுள்ளோம்.

இருப்பினும் வெளியிலிருந்து வருவோர் அப்பகுதிகளுக்குள் பிரச்சினைகளை தோற்றுவிக்க நாம் இடமளியோம். அதற்காக மாகாண மதத் தலைவர்கள் குழுவொன்றை நியமித்து பிரச்சினைகளை நிவர்த்திக்கவும் எதிர்பார்த்துள்ளோம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட்டால் பிரச்சினைகள் ஏற்படாது.

அதேபோல் அரசமைப்பின் 13 ஆவது திருத்திற்கமைவானசட்டமூலமொன்று 20 வருடங்களின் முன்னர் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் உள்ளடக்கங்களை நாம் மாற்றியமைத்தோம். ஒவ்வொரு மாகாணங்களிலிருந்தும் ஒருவர் என்ற அடிப்படையில், 09 பிரதிநிதிகள் மற்றும் மத்திய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு பதவிகளை வகிக்கும் 12 பேர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

அதேபோல், காணி பயன்பாடு தொடர்பிலான தேசிய கொள்கை ஒன்றை தயாரிக்க வேண்டும். காணி பயன்பாடு தொடர்பிலான இணக்கபாட்டினையும் எட்ட வேண்டும். காணி தொடர்பிலான மறுசீரமைப்புக்கள் எவையும் மேற்கொள்ளப்படாது என்பதோடு, காணிச் சட்டம் தொடர்பில் தேசிய அளவில் மாற்றங்கள் செய்யப்படும். அதனை செயற்படுத்தும் பணிகள் மாகாண சபைகளிடத்தில் ஒப்படைக்கப்படும். தேசிய காணி ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய அந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும்.' - என்றார்.

முன்னாள் அமைச்சர் மலிக் சமரவிக்ரமவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

## ஒலுவிலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து தெரிவித்த கொரிய தொழிலதிபர், இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தாம் மிகவும் ஆர்வத்துடன் இருப்பதாகவும் அதற்கான உதவிகள் கடற்றொழில் அமைச்சர் மற்றும் கடற்றொழில் அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டால் பல பில்லியன் ரூபாக்களை முதலீடு செய்வதற்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

பதிலளித்த கடற்றொழில் அமைச்சர், ஒலுவில் கடற்றொழில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்ததுடன் அதனடிப்படையில் குறித்த தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். அத்துடன், இத் தொழிற்சாலை இலங்கை முதலீட்டுச் சபையின் (BOI) கீழ் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் அதன் பொருட்டு வர்த்தக அமைச்சுடன் பேசி உரிய நவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, கங்கின் கொரிய தொழிற்சாலையின் பிரதிநிதிகள் மற்றும் அவரது இலங்கைக்கான இணைப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## சர்வதேசத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கப்பட்டோர் தினத்தில் மீண்டும் ஒரு தடவை சர்வதேசத்தின் மனச்சாட்சியை தட்டி நீதி கேட்கிறோம்.

அரசினது பொய்யான வாக்குறுதிகளை நம்பி கைக்குழந்தைகள் சிறுவர்களுடன் சரணடைந்தவர்கள், உறவுகளால் கையளிக்கப்பட்டவர்கள், இராணுவத்தாலும் விசேட அதிரடிப் படையினராலும், இராணுவ துணைக்குழுக்களாலும் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் வைத்துகடத்தியும், கைதுசெய்தும் கொண்டு செல்லப்பட்டவர்கள் என பல்வேறு வகையிலும் அரச படைகளாலும், துணை இராணுவக் குழுக்களாலும், தமிழர்கள் வலிந்து காணாமல்போகச் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஆட்சியாளர்களாலும், இராணுவ உயர்மட்ட அதிகாரிகளாலும் நன்கு திட்டமிட்ட முறையிலே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். போர் முடிவடைந்த பின்பு எமது கைகளால் ஒப்படைக்கப்பட்டவர்களைத் திருப்பிக் கேட்கும்போது போரில் இறந்து விட்டதாக இலங்கை ஆட்சியாளர்கள், பொறுப்பான பதவியில் உள்ளவர்கள் பொறுப்பற்றுப் பதிலளிக்கின்றனர்.

அவர்கள் வேண்டுமென்றே பொய்யுரைப்பது தெரிந்தும் சர்வதேசம் அமைதி காக்கின்றது. அது மட்டுமல்ல எமது உறவுகளை காணாமல் ஆக்கிய மக்களைப் படுகொலை செய்த கொலையாளியை நீதிமானாக உருவகித்து உள்நாட்டுப் பொறிமுறையில் அவர்களிடமே நீதி கூறும் பொறுப்பை ஒப்படைத்துள்ளது.

அடுத்தடுத்து வந்த சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கு நாம் விடுத்த வேண்டுகோள்களும் எமது அமைதியான போராட்டங்களும் தொடக்கத்தில் எமது அன்புக்குரியவர்களைத் திருப்பித் தருமாறு அல்லது குறைந்த பட்சம் அவர்களின் கதியைப்பற்றிய தகவல்களை எமக்கு வழங்குமாறு, தொடர்ச்சியாக வந்த சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்து வந்தோம்.

எவ்வாறாயினும், எங்கள் கோரிக்கைகளுக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. உள்ளூர் பொறிமுறைகளில் நம்பிக்கை இழந்த நாங்கள் கடந்த ஐந்தரை ஆண்டுகளாக நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைதியான முறையில் சர்வதேச நீதியை வேண்டியே போராட்டங்களை நடத்தி வருகிறோம். ஆயின், இந்த அமைதியான ஆர்ப்பாட்டங்கள் பெரும்பாலும் சிறிலங்கா இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும் கொடூரமாக முறையில் பலதடவைகள் நசுக்கப்பட்டுள்ளன.

இந்த சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிஸாரும் எமது அன்பிற்குரியவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களில் தொடர்புபட்டவர்கள். இக்குற்றவாளிகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தாது நீதியிலிருந்து தப்பிக்க அனுமதிப்பதானது சிறிலங்காவின் சிங்கள அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்கள் தமிழ் சமூகத்திற்கு எதிராக மேலும் சர்வதேசக் குற்றங்களைச் செய்ய அனுமதி அளிக்கின்றது.

இந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் எம்மை சுற்றி தொடர்ந்தும் நிலை கொண்டிருப்பதும், நம்மை அச்சுறுத்தும் செயல்பாடானதும் எமக்கு சாவுப் பயத்தையும் நம்முடன் இருக்கும் நம் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாகவும் கவலையையும் ஏற்படுத்துகின்றது. இந்த பயம் நம்மை தினம் தோறும் ஆட்டிப்படைக்கிறது. இந்த அச்சுறுத்தும் சூழல் இருந்த போதிலும், நாங்கள் எங்கள் போராட்டங்களில் உறுதியாக இருக்கிறோம்.

***காணாமல் போனோர் அலுவலகத்தை (OMP) அமைத்து ஏமாற்றும் சிறிலங்கா ஆட்சியாளர்களின் தந்திரம்*** ஆறு வருடங்கள் காலங்கடத்திய பின்பும், ஆட்சியாளர்களினால்

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு தாய்லாந்தின் ஒத்துழைப்பு தொடரும்

## இருதரப்பு பேச்சில் உறுதி

இலங்கை படிப்படியாக அடைந்துவரும்பொருளாதார மீட்சியைப் பாராட்டியுள்ள தாய்லாந்து, தமது இருவருட அமுலாக்க செயற்திட்டத்தின்கீழ் இலங்கையின் பல்வேறு முயற்சிகளுக்கு அவசியமான ஒத்துழைப்புத் தொடர்ந்து வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான 5 ஆவது இருதரப்பு அரசியல் பேச்சுகள் கொழும்பில் அமைந்துள்ள வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றன.

இலங்கையின் சார்பில் வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் தாய்லாந்து நாட்டின் சார்பில் அந்நாட்டு வெளிவிவகார நிரந்தர செயலாளர் சருண் சரேன் சுவான் ஆகியோரால் தலைமை தாங்கப்பட்ட இப்பேச்சில் அரசியல், வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, கலாசாரம் மற்றும் சுற்றுலா என்பன உள்ளடங்கலாக இருநாடுகளினதும் பரஸ்பர அக்கறைக்குரிய பல்வேறு துறைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன் இத்துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கருத்து வெளியிட்ட வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன, இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மையைநோக்கிப்பயணிக்கும் தற்போதைய சூழ்நிலையில் தாய்லாந்துடனும்பரந்துபட்ட ஆசியான் பிராந்தியத்துடனும் இருதரப்பு உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பதாக தாய்லாந்து பிரதிநிதிகளிடம் தெரிவித்தார். குறிப்பாக தாய்லாந்து - இலங்கை சுதந்திரவர்த்தகஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை கடந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்குவந்த விரிவான பிராந்தியப் பொருளாதாரப் பங்காளித்துவ உடன்படிக்கையில் இணைவதற்கு இலங்கை உத்தேசித்திருப்பதாகவும், அந்த உடன்படிக்கையின் 15 ஸ்தாபக உறுப்புநாடுகளில் ஒன்று என்றரீதியில்இந்தவிடயத்தில் தாய்லாந்து தமக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்றும் அருணி விஜேவர்தன கேட்டுக்கொண்டார்.

அதனையடுத்து புதிய பிரதமர் நியமனம் உள்ளடங்கலாக தாய்லாந்தின் அண்மையகால முன்னேற்றங்கள் குறித்து வெளிவிவகார செயலாளருக்குத்தெளிவுபடுத்திய சருண் சரேன்சுவான், கடந்த ஆண்டிலிருந்து இலங்கை படிப்படியாக அடைந்துவரும்பொருளாதார மீட்சியைப் பாராட்டியதுடன் தாய்லாந்தின் இருவருடகால செயற்திட்டத்தின்கீழ் இலங்கையின் பல்வேறு முயற்சிகளுக்கு அவசியமானஒத்துழைப்புதொடர்ந்து வழங்கப்படும்என்றும்உறுதியளித்தார்.

அதுமாத்திரமன்றி ஆசியான், பிம்ஸ்டெக், ஐயோரா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட பிராந்திய மற்றும் பல்தரப்புக் கட்டமைப்புக்களின் அண்மையகால நடவடிக்கைகள், முன்னேற்றங்கள் தொடர்பிலும்இந்தச்சந்திப்பின்போது ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்கள் விக்கிரமசிங்கவுடனேயே இருப்பார்கள்

## பாலித ரங்கே பண்டார அபரிமித நம்பிக்கை

ஜனாதிபதிவேட்பாளராக யார் முன்வந்தாலும் தேசத்தைப் பாதுகாத்த ரணில் விக்ரமசிங்கவே பொது வேட்பாளர். நாட்டு மக்கள் ரணில்விக்கிரமசிங்கவுடனே இருக்கின்றனர்.

அத்துடன் சஜித் பிரேமதாஸ ஒருபோதும் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கப்போவதில்லை என்பதை நூறுவீதம் உறுதியாகத் தெரிவிக்கிறோம் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கேபண்டாரதெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்த கருத்துக்கள் வருமாறு -

ஜனாதிபதி தேர்தல் நிச்சயமாக அடுத்த வருடம் இடம்பெறும். அதில் தேசத்தைப் பாதுகாத்தவர் என்ற வகையில் ரணில் விக்ரமசிங்க பொது வேட்பாளராகப் போட்டியிடுவார் என்பதை நாங்கள்ஆரம்பத்தில்இருந்து தெரிவித்து வருகிறோம். ஆனால் எதிர்க்கட்சிகள் யாரும் இதுவரை அவர்களின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைத் தெரிவிக்கவில்லை. அதேநேரம் டலஸ்அணி புதிய கூட்டணி அமைப்பதற்காகத் தற்போது ஜே.வி.பி. ஐக்கியமக்கள்சக்தி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகளுடன்கலந்துரையாடி வருகிறது.

இவர்கள் கூட்டணி அமைப்பதன் மூலம் அரசாங்கத்துக்கு எந்த சவாலும் ஏற்படப்போவதில்லை. ஆனால் மக்களுக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். ஏனெனில் வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் படிப்படியாகக் கட்டியெழுப்பிவரும் நிலையில் இவர்கள் கூட்டணி அமைத்து அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்போது அதனால் மக்களுக்கே மீண்டும் நெருக்கடிநிலைமைகள் ஏற்படும்.

அத்துடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸ ஒருபோதும் வேட்பாளராகக் களமிங்கப்போவதில்லை. ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ என தற்போது தெரிவித்து வந்தாலும் அது இடம்பெறப்போவதில்லை. அதனை நூறு வீதம் உறுதியாகத் தெரிவிக்கிறேன்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவிலும் இறுதி நேரத்தில் டலஸ் அழகப்பெருமவை முன்னிலைப்படுத்தி அவர் ஒதுங்கிக்கொண்டார். அதேபோன்று தற்போதும் டலஸ் அல்லது மைத்திரிபால சிறிசேனவை இறுதி நேரத்தில்பலிகொடுத்து அவர் தப்பிக்கொள்வார்.

மேலும் பொதுஜன பெரமுன பஸில் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்போவதாக தெரிவிக்கப்பட்டாலும் அவர்களுக்குள் இன்னும் உறுதியான தீர்மானம் இல்லை. ஏனெனில் அந்தக் கட்சியில் அதிகமானவர்கள் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கி, அவருக்கு ஆதரவளிக்கவேண்டும்என தெரிவித்து வருகின்றனர். அதனால் பஸில் ராஜபக்ஷ விருப்பம் என்றால் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முடியும்.

அதனால் பொதுஜன பெரமுனவோ அல்லது வேறு எந்த கட்சியும் ஜனாதிபதி வேட்பாளராக யாரை களமிறக்கத் தீர்மானித்தாலும் ஐக்கிய தேசிய கட்சி ரணில் விக்ரமசிங்கவை பொது வேட்பாளராக களமிக்குவோம். நாட்டின் தற்போதைய நிலைமையில் ரணில் விக்ரமசிங்கவே ஜனாதிபதியாக நியமிக்கப்படவேண்டும் என்பது பெரும்பான்மை மக்களின் நிலைப்பாடாகும்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியானால் மாத்திரமே நாட்டை மீட்கும் வேலைத்திட்டத்தைத் தொடர்ந்து முன்னுக்கு கொண்டுசெல்ல முடியும். இல்லாவிட்டால் மீண்டும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து மக்கள் வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்படும். அந்த நிலைக்கு மக்கள் இடமளிக்கப்போவதில்லை என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.-என்றார். (05)

# நெதர்லாந்திடமிருந்து பொறுப்பேற்கப்படவுள்ள தொல்பொருள்களை பாதுகாக்க விசேட ஏற்பாடு

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



நெதர்லாந்துக்கு கடந்த இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டு செல்லப்பட்ட கண்டி இராசதானி காலத்துக்குரிய ஆறு தொல்பொருள்களை மீண்டும் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் இறுதிக்குள் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். அவற்றின் பாதுகாப்புக்காக விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்தார் .

அவர் மேலும் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு -

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் நெதர்லாந்துக்குக் கொண்டு செல்லப்பட்ட கண்டி இராசதானி காலத்துக்குரிய ஆறு தொல்பொருள்களை மீண்டும் இலங்கைக்குப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பேச்சுகளை முன்னெடுப்பதற்கு கடந்த ஜூன் 26 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதற்கமைய நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பின்னர் நெதர்லாந்துஅரசுகுறித்தஆறுதொல் பொருள்களை மீண்டும் இலங்கைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அந்நாட்டு அரச வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த தொல் பொருள்களை மீண்டும் பொறுப்பேற்றுக் கொள்வதற்காக இருதரப்பினர்களுக்கிடையே உடன்பாடுகளைத் தெரிவிக்கின்ற சட்டரீதியான ஆவணத்துக்கு மற்றும் குறித்த தொல்பொருள்களை பௌதீக ரீதியாக எமது நாட்டுக்குக் கொண்டு வரும் வரை நெதர்லாந்தின் நூதனசாலையில் வைத்திருப்பதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இவை நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் அவற்றைப் பாதுகாப்பதற்கு விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சால் அதற்கான வேலைத்திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும். என்றார். (05)

# குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு மருந்துகளை இலவசமாக வழங்க திட்டம்

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட பல தொற்றா நோய்களுக்கான மருந்துகளைவாங்கமுடியாத குறைந்த வருமானம்பெறும் மக்களுக்கு மருந்துகளை இலவசமாகவழங்கும்விசேட வேலைத்திட்டமொன்றை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆரம்பித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இந்த நாள்களில் ஏற்பட்டுள்ள மருந்துப் பற்றாக்குறை மற்றும் மருந்துப் பொருள்களின் விலை அதிகரிப்பைக் கருத்திற்கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் 10 வைத்திய முகாம்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் செய்து வருகிறது.

25,000 அமெரிக்க டொலர்கள் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள மருத்துவ முகாம்கள் மூலம், குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு இலவச மருத்துவச் சேவைகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஏற் கனவே முன்னெடுத்து வருகிறது. தற்போது கொலன்னாவ, மெகொட கொலன்னாவ, பொல்கஸ்ஸோவிட்ட ஆகிய பிரதேசங்களில் மூன்று மருத்துவ முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டிருந்தன. இந்த வேலைத்திட்டத்தின் வெற்றிக்கு, பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்கள், தொற்றா நோய் பிரிவுகள் மற் றும் மருத்துவ அதிகாரி அலுவலகத்தின் வைத்திய அதிகாரிகள், குறித்த பகுதிகளுக்கான பொதுச் சுகாதார பரிசோதகர்கள்மற்றும்குடும்ப சுகாதார அதிகாரிகளிடமிருந்து அதிகபட்சஆதரவுகிடைத்ததாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சிரேஷ்ட உப தலைவர் ஜகத் அபேசிங்க தெரிவித்தார். (05)

# கரிசனைகளை தெளிவுபடுத்த மத்திய வங்கி ஆளுநர் விடுத்த அழைப்பைத் தவறவிட்ட போராட்டக்காரர்கள்

உள்ளகக்கடன் மறுசீரமைப்பால் ஊழியர் சேமலாப நிதியத்தில் ஏற்படக்கூடிய தாக்கத்துக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடனான சந்திப்புக்கு ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவால் அழைப்புவிடுக்கப்பட்ட போதிலும், அச்சந்தர்ப்பம் போராட்டக்காரர்களால் தவறவிடப்பட்டிருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை செயற்திட்டத்தை (உள்நாட்டுக்கடன் மறுசீரமைப்பு) நடைமுறைப்படுத்துவதன் விளைவாக ஊழியர் சேமலாப நிதியத்தில் ஏற்படக்கூடிய தாக்கத்துக்கு எதிராக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் கவனவீர்ப்புப்போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் உள்நாட்டுப்படுகடன் மேம்படுத்துகை மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக இலங்கை மத்திய வங்கி உத்தியோகத்தர்களுடனான சந்திப்பொன்றுக்கு கோட்டை பொலிஸ் நிலையத்தின் ஊடாகக் கோரிக்கைவிடுத்ததாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்த மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, எதிர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐவரடங்கிய குழுவினரை திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு சந்திப்பதற்குத் தயார் என்று கோட்டை பொலிஸ் நிலையத்தின் ஊடாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு அறிவித்தார் எனவும் மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் சந்திப்புப் பற்றிய விவரங்கள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்கான அவர்களது இயலாமை பற்றி எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் கோட்டை பொலிஸ் நிலையத்தின் ஊடாக மத்திய வங்கிக்கு அறிவித்துள்ளனர்.

இதன்மூலம் உள்நாட்டுப்படுகடன் மேம்படுத்துகை, அச்செயற்திட்ட அமுலாக்கத்தில் உறுப்பினர் பங்களிப்புக்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள முறைமை, இச்செயற்திட்டத்தின்கீழ் ஊழயர் சேமலாப நிதிய உறுப்பினர்களுக்குக் கடந்த பல ஆண்டுகளாக வழங்கப்பட்டதைப்போன்று குறைந்தபட்ச முதலீட்டு ஆதாயம்வழங்கப்படவுள்ள முறைமை என்பன பற்றிய கரிசனைகளைத் தெளிவுபடுத்திக்கொள்வதற் குப் போராட்டக்காரர்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்பு தவறவிடப்பட்டுள்ளது. - என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (05)

# மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க அனுநாயக்க தேரர்களிடம் ஆசி பெற்றார் ஜனாதிபதி







ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செவ்வாய்க்கிழமை பிற்பகல் மல்வத்து, அஸ்கிரி மகாநாயக்க மற்றும் அனுநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்றார்.

முதலில் மல்வத்து மகாவிகாரைக்கு வருகை தந்த ஜனாதிபதி, மல்வத்து பீடத்தின் மகாநாயக்க வண. திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரரைச் சந்தித்து நலம் விசாரித்ததுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். அதனையடுத்து தேரர், பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மல்வத்து பீடத்தின் அனுநாயக்க வண. திம்புல்கும்புரே ஸ்ரீவிமலதம்ம தேரரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

அதன்பின்னர் அஸ்கிரி மகாவிகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அஸ்கிரி பீடத்தின் மகாநாயக்க வண. வரகாகொட ஸ்ரீஞானரதன தேரரைச் சந்தித்து ஆசிர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார். வரலாற்று சிறப்புமிக்க முதியங்கனை ரஜமகா விகாரையின் பொறுப்பாளர் கலாநிதி வண. முருந்தெனியே ஸ்ரீதம்மரத்தன நாயக்க தேரரும் மேற்படி சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தார்.

அதனையடுத்து ஜனாதிபதி, அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்க தேரர்களான, வண. ஆணமடுவே தம்மதிஸ்ஸி தேரர் மற்றும் வண. வெடருவே உபாலி தேரர் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

முன்னாள் அமைச்சர் மலிக் சமரவிக்ரம, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கமல் புஷ்பகுமார ஆகியோரும் இந்தச் சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தொடரும் அவலத்திற்கு எப்போது முற்றுப்புள்ளி?

நேற்று பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டோருக்கான பன்னாட்டு நினைவு நாள். இதையொட்டி இலங்கையின் வடக்கு கிழக்கில் பெருமெடுப்பில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றன. முக்கிய நகரங்களான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா போன்ற இடங்களில் இந்தப் போராட்டங்கள் நடந்தன. காணாமலாக்கப்பட்ட தமது உறவினர்களுக்கு நீதி வேண்டியும், இந்த விடயம் தொடர்பில் சுயாதீனமான பன்னாட்டு விசாரணை ஒன்றையே தாம் எதிர்பார்க்கின்றனர் என்பதை வலியுறுத்தியும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னர், கடந்த 13 ஆண்டுகளாக நடந்துவரும் தொடர் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்தப் போராட்டமும் இடம்பெற்றது. தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இந்தப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபடுகின்றார்கள் என்றாலும் அவர்களுக்கு இன்னமும் உரிய பதில் எதுவும் கிடைக்கவில்லை.

காணாமாலாக்கப்பட்டவர்களில் எவரும் உயிரோடு இல்லை என்று மாறி மாறி பதவிக்கு வரும் அரசுத் தலைவர்களும் ஆட்சியாளர்களும் உறுதிபடத் தெரிவிக்கின்றார்கள். அவர்கள் போரில் கொல்லப்பட்டார்கள் என்றும் விளக்கம் கூறப் பார்க்கின்றார்கள். ஆனால், போர் முடிந்த பின்னர் இலங்கை அரச படைகளிடம் தமது உறவினர்களை நேரில் ஒப்படைத்த சாட்சிகள் நிறையப் பேர் இன்னமும் உயிருடன் உள்ளனர். அவர்களில் பலரின் சாட்சியங்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்ட அரசுத் தலைவர் ஆணைக்குழுக்கள் பலவற்றின் அறிக்கைகளில் இடம்பெற்றுள்ளன. காணாமலாக்கப்பட்ட எவரும் உயிருடன் இல்லை என்றால், உயிரோடு அரச படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது, எப்போது நடந்தது, யார் அதற்குப் பொறுப்பாளிகள் என்பவற்றை வெளிப்படுத்த வேண்டியது பொறுப்பான மக்கள் அரசு ஒன்றின் கடமை. ஆனால், கொழும்பு இன்றுவரை அவை குறித்து எந்தவொரு நடவடிக்கையும் எடுத்ததில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் பன்னாட்டுச் சமூகம் ஆகியவற்றின் வற்புறுத்தல், அழுத்தம் காரணமாக காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் திறக்கப்பட்டது. ஆனால் அதன் நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்பு என்றே பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அஞ்சுகின்றனர். அதனால் அந்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுக்கும் அவர்கள் பன்னாட்டு விசாரணை ஒன்றையே கோரி நிற்கின்றனர். தான் திட்டமிட்ட இனப்படுகொலையை நடத்தவில்லை என்று கூறுகின்றபோதும், சிங்கள ஆட்சியாளர்கள் அத்தகைய பன்னாட்டு விசாரணை ஒன்றை ஏற்றுக்கொள்ளத் தொடர்ந்து மறுத்து வருகின்றனர்.

ஆனால், இந்தப் பிரச்சினையைத் தீர்க்காமல், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுக்காமல் நாடு நிலையான அபிவிருத்தியை அடைய முடியாது என்று, காணாமலாக்கப்பட்டவர்களுக்கான பன்னாட்டுத்தினத்தில் அறிக்கை வெளியிட்டுள்ள கொழும்புக்கான ஐ.நா. நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தெரிவித்துள்ளார். காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களது தொடரும் அவலங்களைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், அவர்களுக்கு நீதி வழங்கப்படுவதன் அவசியத்தையும் விலியுறுத்தியுள்ளார்.

தொடரும் இந்த அவலநிலையால் காணாமலாக்கப்பட்டவர்களின் வாழ்வும் நிச்சயமற்ற தன்மையும் காணப்படுகின்றது என்பதையும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் சிறிதளவு முன்னேற்றம் கூட ஏற்படவில்லை என்பதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. உண்மை நீதி மற்றும் இழப்பீடு போன்றவற்றிற்கான பாதிக்கப்பட்டோரின் உரிமை தொடர்பில் இன்னமும் அதிகளவு செயற்பாடுகள் அவசியமாக உள்ளன, பாதிக்கப்பட்டவர்களின் நிலை அவர்கள் எங்கிருக்கின்றார்கள் போன்றவற்றை அறிந்துகொள்வதற்கான முயற்சிகளை ஆட்சியாளர்கள் துரிதப்படுத்தவேண்டுமென நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துயரத்தை எதிர்கொண்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கவேண்டும் குற்றவாளிகளை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்தவேண்டும் எனவும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்றும் ஐ.நா. வலியுறுத்தியுள்ளது. ஆனால், அந்தப் பொறுப்புக்கூறல் பன்னாட்டு விசாரணையின் மூலமே ஏற்படவேண்டும் என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இது தொடர்பான பரிந்துரையான பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திற்கு இலங்கையைப் பாரப்படுத்த வேண்டும் என்கிற கருத்தை நிலைநாட்டுவதன் மூலமே இந்த விடயத்தில் உரிய தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## இலங்கை – ஜப்பான் நாடுகள் இடையே தொழிநுட்பப் புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கை மின்சார சபை 2018 ஆம் ஆண்டு தொடக்கம் ஜப்பான் மின்சக்தி நிலையத்துடன் இணைந்து பங்களிப்புடன் செயலாற்றியதுடன், 2019 ஆம் ஆண்டில் தொழிநுட்ப ஒத்துழைப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு செயலாற்றியதற்கு அமைவாக ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒத்துழைப்புக்களின் அடிப்படையில் பல்வேறு அறிவுப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடுவதற்கு இயலுமாகும் வகையில் 2023ஆம்ஆண்டுதொடக்கம் தொழிநுட்ப ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தைநடைமுறைப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்குஇருதரப்பும் உடன்பட்டுள்ளன. அதற்காக முன்மொழியப்பட்டுள்ள தொழிநுட்ப ஒத்துழைப்பு பற்றியபுரிந்துணர்வுஒப்பந்த வரைவுசட்டமாஅதிபர்மற்றும் வெளிவிவகார அமைச்சின் அவதானிப்புக்களுக்குஅமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

## இந்து சமுத்திர எல்லை நாடுகள் அமைப்பின் அமைச்சுப் பேரவைக் கூட்டம் இலங்கையில்

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் அமைப்பு 1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது 23 நாடுகள் அதன் உறுப்புரிமையைக் கொண்டுள்ளன.

இந்த அமைப்பின் 25 ஆவது முதுநிலை அதிகாரிகளின் குழுக்கூட்டம் எதிர்வரும் ஒக்ரோபர் 9 மற்றும் 10 ஆம் திகதிகளிலும், 23 ஆவது அமைச்சுப் பேரவைக் கூட்டம் ஒக்ரோபர் 11 ஆம் திகதியும் கொழும்பில் நடைபெறவுள்ளன.

அமைச்சுப் பேரவைக் கூட்டத்தில் 2023 தொடக்கம் 2025 வரையான காலப்பகுதிக்கான இந்து சமுத்திர எல்லை நாடுகளின் அமைப்புக்களின் தலைமைத்துவத்தை இலங்கை பொறுப்பேற்கவுள்ளது.

குறித்த காலப்பகுதியில் 'பிராந்திய அடிப்படையை பலப்படுத்தல்: இந்து சமுத்திரத்தின் தனித்துவத்தை வலுவூட்டல்' எனும் தொனிப்பொருள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த தகவல்கள் அமைச்சரவையின் கருத்தில்கொள்ளப்பட்டுள்ளது. (05)

## துப்பாக்கிச் சூடு பெண் காயம்!

### சகோதரியின் கணவர் கைது

மாத்தறை, பங்கம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் பெண்ணொருவர் காயமடைந்துள்ளதுடன், துப்பாக்கி சூடு மேற்கொண்ட பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெதியகல பிரதேசத்தில் பெண்ணொருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார் என பங்கம பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட குடும்பத்தகராறு காரணமாக காயமடைந்த பெண்ணின் சகோதரியின் கணவர் மூலம் இந்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காயமடைந்த பெண் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். 25 வயதுடைய தெதியகல, மலிந்துவ பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவரே சம்பவத்தின் போது காயமடைந்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சந்தேக நபர் அக்குரஸ்ஸ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லெனம பிரதேசத்தில் அக்குரஸ்ஸ பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது சந்தேக நபரிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 38 வயதுடைய லேனம, அகுரஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் மாத்தறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார் என்பதுடன் சம்பவம் தொடர்பில் பங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## பட்டா ரக வாகனம் தீயில் எரிந்து நாசம்




யாழ்ப்பாணத்தில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பட்டா ரக வாகனம் ஒன்று திடீரெனத் தீப்பிடித்து முற்றாக எரிந்துள்ளது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் வல்லை சந்திப்பகுதியில், செவ்வாய்க்கிழமை மதியம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்றுக் கொண்டிருந்த பொருள்கள் ஏற்றும் பட்டா வாகனமே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது.

தீ விபத்துக்கு மின் ஒழுக்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## வான் ரயிலுடன் மோதி வாதுவையில் விபத்து

### ஒருவர் காயம்



வாதுவை, தல்பிட்டியவில் பாதுகாப்பற்ற கடவையில் வான் ஒன்று ரயிலில் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்து புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

களுத்துறை வடக்கிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த ரயிலில் குறித்த வான் மோதி ரயிலின் இயந்திரத்தில் சிக்கியுள்ளது.

வானில் இருவர் பயணித்த நிலையில் சாரதியை பிரதேசவாசிகள் காப்பாற்றியுள்ளதோடு, வானுக்கும் ரயிலுக்கும் இடையே பெண் ஒருவர் சுமார் ஒரு மணி நேரம் சிக்கிக்கொண்டு இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதனையடுத்து, தீயணைப்புப் பிரிவினரும் பிரதேசவாசிகளும் இணைந்து மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து குறித்த பெண் மீட்கப்பட்டு பாணந்துறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளானவர்கள் கொட்டிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் வானின் முன்பகுதி முற்றாக சேதமடைந்துள்ளதுடன், ரயிலின் இயந்திரம் சேதமடைந்துள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை வடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## பெண் பொலிஸ் உத்தியோகத்தருக்கு பாலியல் சீண்டல்; அதிகாரி இடமாற்றம்

பெண் பொலிஸ் உத்தியோகத்தருடன் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட பலாலி பொலிஸ் நிலையபதில் பொறுப்பதிகாரி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி இரவுவேளை கணினிப் பிரிவில் கடமையில் இருந்த பெண்பொலிஸ்அதிகாரியுடன், போதையில் இருந்த குறித்த பதில்பொறுப்பதிகாரி பாலியல் அங்கசேட்டையில் ஈடுபட்டார் என்று அந்தப்பெண்பொலிஸ் அதிகாரியால் முறைப்பாடு வழங்கப்பட்டது.

இந்நிலையிலேயே குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிக்கு இடமாற்றப்பட்டதுடன் ஒழுக்காற்று விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (05)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பொது வேட்பாளர் என்கிற பேச்சுக்கே இடமில்லை; வாடகைக்கு ஆள் பிடிக்கும் தேவையே கிடையாது

## மொட்டு கட்சி எம்.பி. ரோஹித அபேகுணவர்தன திட்டவட்டம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவோம். பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமில்லை. அத்துடன் வாடகைக்கு வேட்பாளரை பெற வேண்டிய தேவையும் எமக்கு கிடையாது என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பயாகலை பகுதியில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்காகவே நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தோம்.

ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர்ரணில்விக்கிரமசிங்க தலைமையில்அரசாங்கத்தை தோற்றுவித்துள்ளதால் எமது கட்சியின் கொள்கைகளை விட்டுக் கொடுக்க முடியாது.

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்துசெயற்படுவது குறித்து இதுவரை எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவோம்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனபொதுவேட்பாளர்ஒருவரை களமிறக்கவுள்ளதாக குறிப்பிடப்படும் செய்தி அடிப்படையற்றது.

வாடகைக்கு வேட்பாளரைப் பெற வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. எமது கொள்கைகளை முன்னிலைப்படுத்தும் வேட்பாளரை களமிறக்குவோம். எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள கட்சி யின் வருடாந்த மாநாட்டில் முக்கிய அரசியல் தீர்மானங்களை அறிவிப்போம். கட்சியைப் பலப்படுத்தும் வகையில் பல தீர்மானங் களை தற்போது முன்னெடுத்துள்ளோம்.மக்கள் மத்தியில் ராஜபக்ஷர்களுக்கு உள்ள செல்வாக்கை ஒரு போதும் இல்லாதொழிக்க முடியாது. - என்றார். (05)

# ராஜபக்ஷக்களுக்காகவே நாம் இன்றும் நிற்கிறோம்

## தனது நிலைப்பாட்டை கூறிய பிரசன்ன ரணதுங்க

எனது வெற்றிக்காக அல்ல, பொதுஜனபெரமுனவின் வெற்றிக்காகவே தேர்தலில்நின்றதாகநகரஅபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வயதாகிவிட்டதாக கூறி நாடாளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டவர்களில்சிலர் எதிர்க்கட்சியில் இணைந்து ராஜபக்ஷக்களை விமர்சித்தாலும்தாம்இன்றும்ராஜபக்ஷர்களுக்காகவே நிற்பதாக அமைச்சர் கூறினார்.

தம்மைபற்றியார்என்ன சொன்னாலும் கம்பஹா மக்களுக்கு தெரியும் எனவும் அமைச்சர் கூறினார்.

கம்பஹா மாவட்டத்தின் பியகம தொகுதியில் கிளைச் சங்கங்களை வலுப்படுத்துதல் மற்றும் அங்கத்துவத்தை ஊக்குவித்தல் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவித்தகருத்துக்கள்வருமாறு-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கிராம மட்டத்தில் உள்ளகட்சிஉறுப்பினர்களின் பலத்தில் இருந்து உருவாக்கப்பட்டது. கட்சித்தலைவர்கள் ஒன்று கூடி, கட்சியை உருவாக்கி, கிராம அளவில் உறுப்பினர்களைச்சேர்க்கும் கட்சியல்ல இது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒரு கிராமத்திலிருந்து பத்து உறுப்பினர்களை சேர்த்து, அந்த பத்து பேரை இன்னும் பத்து பேரை சேர்த்துக் கொள்ளச்சொல்லி,கிளைகளை உருவாக்கி வளர்க்கப்பட்டது.

இப்போது யார் கதையளந்தாலும் அன்று 2015 இல் ஏற்பாடு செய்யப்பட்ட நுகேகொட மேடையில் ஏறுவதற்கு யாரும் இருக்கவில்லை. மஹிந்தமாகாணமுதலமைச்சர்களைவிட்டுவெளியேறிய போது நான் மட்டுமே முதலமைச்சராக மேடையில் நின்றிருந்தேன்.

அந்த பலத்தை எனக்கு மேல் மாகாண சபை சில உறுப்பினர்களும் உள்ளூராட்சி மன்ற சில உறுப்பினர்களும் ஆதரவு தந்தார்கள். அப்போது அந்த அணி இல்லை என்றால் எனக்கு அந்த பலம் இருந்திருக்காது. நாடு முழுவதிலும் உள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களால் மஹிந்த காற்றின் கூட்டத் தொடர் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

கட்சியின் கிளைகளை நிறுவினர். எனவேஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள எமக்கு கட்சியை பாதுகாக்க பெரும் உரிமை உள்ளது. மஹிந்த அரசியலுக்குவருவதாககூறியபோது பஸில்ராஜபக்சவின்அமைப்பு பலம் கட்சியை நாடளாவிய ரீதியில் வழிநடத்தியது.

அந்த அமைப்பு பலத்தினால்தான் ஜனாதிபதித் தேர்தலில் 69 லட்சம் வித்தியாசத்தில் வெற்றி பெற்று நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு வித்தியாசத்தில் வெற்றி பெற முடிந்தது. துரதிஷ்டவசமாக இந்த நாடு பொருளாதார நெருக்கடியை சந்திக்க நேர்ந்தது.

அது எங்களால் ஏற்படவில்லை. முப்பது வருட யுத்தத்தால் நாட்டின் பொருளாதாரம் அழிந்தது. கறுப்பு ஜூலை 83, 88, 89 பயங்கரவாதம், போராட்டம் மற்றும்இயற்கைபேரழிவுகள் பொருளாதாரத்தை அழித்தன. அரச சொத்துக்கள் அழிக்கப்பட்டன. 88/89 பயங்கரவாதத்தை அவர்கள் எப்படி எதிர்கொண்டார்கள் என்பது மக்களுக்கு நினைவிருக்கலாம்.

பின்னர், கொரோனா தொற்றுநோயால் முழு நாட்டையும் மூட வேண்டியிருந்தது. அப்போதுநாட்டை மூடவேண்டாம்என்றார்கள். மீண்டும் நாட்டை திறக்க முற்பட்டபோது மக்கள் செத்து மடிவார்கள் என்று கூறி நாட்டை திறக்க வேண்டாம் என அரசுக்கு அழுத்தம் கொடுத்தனர்.

ஆனால் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ இந்த நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாக்க தடுப்பூசிகளை வழங்கிய பின்பே நாட்டைத் திறந்தார். எனக்கு இப்போது அது நினைவில் இல்லை. நாட்டின் பொருளாதாரம் சரிந்தது எங்களால் அல்ல. ரஷ்ய-உக்ரைன் போரால் பல நாடுகள் பாதிக்கப்பட்டன.

கொவிட் தொற்றுநோய்க்குப் பிறகு, சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்குத் திரும்பத் தொடங்கியபோது போராட்டம் தொடங்கியது. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு அதிகாரத்தைப் பெற்று மக்கள் எதிர்பார்த்த இடத்துக்கு நாட்டை கொண்டு செல்ல முற்பட்ட போது ஆரம்பித்த போராட்டத்தால் மொட்டு கட்சியினர் என்னென்ன எதிர்கொள்ளநேரிட்டதுஎன்பது எமக்குத் தெரியும்.

எங்கள்வீடுகளைஎரித்து விட்டு, எங்களை அடித்து நொறுக்கிய பின்னரும் கட்சி எழுந்து நிற்கிறது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இந்த நாட்டின் பலமான அரசியல் கட்சியாகும். ஜனதா விமுக்தி பெரமுனா போராட்டத்தின் பின்னர் எழுச்சி பெற்றது.

கிராமங்களில் அடையாள அட்டை சேகரித்தவர்களும், வங்கிகளை உடைத்தும், பஸ்களுக்கு தீ வைத்தவர்களும் அக்கட்சியிடம்வாக்குகேட்கவந்தனர். அவர்கள் இப்போது எங்கே? கோட்டாபய ராஜபக்ஷவை நான்குற்றம்சொல்லவில்லை. எங்கள்வீடுகளுக்குதீவைத்து கொளுத்தி சட்டத்தை மக்கள் தவறாக கையில் எடுத்த போது மக்களை அடித்து நம் வீடுகளுக்கு தீ வைக்குமாறு அவர் கட்டளையிடவில்லை. மிகவும் அமைதியாக பதவியை விட்டுவிட்டு வீட்டுக்குச் சென்றார்.

மஹிந்தவும், கோட்டாபயவும் தமது பதவிகளை விட்டு விலகிய போது, நாட்டைப் பொறுப்பேற்குமாறு நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்களை அழைத்தோம். ஆனால் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே இந்த சவாலை ஏற்க முன் வந்தார்.

அந்தநேரத்தில்,கட்சியாக நாங்கள் அவருக்கு உதவ முடிவு செய்தோம். அதன் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் எம்மால் ஆக்க முடிந்தது. மக்கள் எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையில் நின்றனர். பொருள்கள் குறைவாக இருந்தன.

ரணில் விக்கிரமசிங்க அவர்களால் ஒரு வருடத்திற்குள் நாட்டை மீட்டெடுக்க முடிந்தது. அதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால்சிலமக்கள்விரும்பாத முடிவுகளுக்குநாம்கைஓங்க வேண்டியுள்ளது.

நாடு இயல்பு நிலைக்கு திரும்பியதும் கட்சி நடவடிக்கைகளைமீண்டும்தொடங்க நினைத்தோம். அன்று எமது அரசாங்கத்தைஅழித்தவர்கள் இன்று ஊடகங்களுக்குவந்து ஓர்அறிக்கைவிடுகின்றார்கள். இப்போது நான் ரணிலின் ஆள் என்று சிலர் கூற முற்படுகின்றனர். எனது பயணம் குறித்து கம்பஹா மக்களுக்குத் தெரியும். 2015 இல் நான் உங்களுடன் நின்றதால் எனது குடும்பத்தினர் என் மீது கோபத்தில் இருந்தனர்.

எனது வெற்றியைப் பற்றி நான் நினைக்கவே இல்லை. நான் எப்போதும் பொஹொட்டுவ மக்களை வெற்றி பெறவே செய்ய சொன்னேன். மற்றபடி எனக்கு விருப்பு வாக்கு கேட்கவில்லை. ஆனால் இன்று ராஜபக்ஷக்கள் நாடாளுமன்றத்திற்கு அழைத்துவரப்பட்டவர்களை வயதானவர்கள் என விமர்சிக்கின்றனர். ஆனால் நாம் இன்றும் மஹிந்தவுக்காக நிற்கிறோம். நாங்கள்மஹிந்த ராஜபக்ஷமற்றும்கோட்டாபய ராஜபக்ஷவைநேசிக்கிறோம். மஹிந்த போரை முடித்து நாட்டை விடுவித்ததால் நாங்கள் அவரை நேசிக்கிறோம். எம்மைப்போலவே ஜே.வி.பி.யும் இன்று வீதியில் நிற்க காரணம் மஹிந்த யுத்தத்தை முடித்து வைத்ததால் தான். அதை மறக்கமாட்டோம். யார்என்ன சொன்னாலும்இந்தக்கட்சியை பாதுகாத்து முன்னேற்றுவது நமது பொறுப்பு. ஆறு அடிகள் முன்னோக்கி வைக்கப் பார்த்து ஓர் அடி பின்னோக்கி வைத்தோம். எனவே இந்த கட்சியை பலப்படுத்தினால் அடுத்த தேர்தலில் வெற்றி பெறும் வேட்பாளருக்கு எங்களதுஆதரவுகண்டிப்பாக தேவைப்படும். நாங்கள் அதற்காக அர்ப்பணித்து செயற்படுவோம். - என்றார். (05)

# புலம்பெயர்வு வள நிலையம் அமைப்பதற்கு நியூசிலாந்தின் முழுமையான ஒத்துழைப்பு

## 3 ஆண்டுகள் வரை நிதி உதவி வழங்கவும் இணக்கம்



புலம்பெயர்வு வள மத்திய நிலையம் ஒன்றை அமைப்பதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக நியூசிலாந்து உயர் ஸ்தானிகராலயம், தொழில்மற்றும்வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம் இணக்கம் தெரிவித்துள்ளதுடன், அதற்குத் தேவையானநிதிஉதவியை வழங்குவதற்கும் உடன்பட்டுள்ளது.

இதுதொடர்பான தீர்மானமிக்க அமைச் சருக்கும்,நியூசிலாந்து உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் பிரதி உயர் உயர்ஸ்தானிகர் அன்ரூ ட்ரவலருக்கும் இடையில் கலந்துரையாடல் தொழில் அமைச்சில் இடம் பெற்றது.

இந்த நிலையத்தை அமைப்பது தொடர்பாக, இரு நாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்கையெழுத்திடப்பட உள்ளதுடன், வெளிநாட்டலுவல்கள் அமைச்சால், சம்பந்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படவுள்ளது.

இந்தநிலையம்அமைக்கப்பட்ட பின்னர் மூன்று வருடகாலத்துக்குநிதிஉதவி வழங்கவும் நியூஸிலாந்து இணக்கம்தெரிவித்துள்ளது. பாதுகாப்பான புலம்பெயர்வு மற்றும்வெளிநாட்டுவேலை வாய்ப்பு தொடர்பில் பாதிக்கப்படக்கூடிய மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் இதன் ஊடாக செயற்படுத்தப்படுவதுடன் மனித கடத்தல் மற் றும் முறையற்ற புலம்பெயர்வுகளைத் தடுப்பதில் இந்த நிலையத்தின் ஊடாக முக்கிய பொறுப்புக்கள் நிறைவேற்றப்படும்.

இந்த வேலைத் திட்டங்களை நாடளாவிய ரீதியில் படிப்படியாக முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த செயற்திட்டத்தின் ஊடாக இலங்கைக்கும் நியூஸிலாந்துக்கும் இடையிலான உறவுகளை மேலும்வலுப்படுத்துவதுடன் மக்களின்வாழ்வாதாரமேம்பாட்டிற்கு பங்களிக்கவும் எதிர்பார்க்கப்படுவதாக நியூசிலாந்தின் பிரதி உயர் ஸ்தானிகர் இதன் போது வலியுறுத்தியுள்ளார். (05)

# இந்திய தேசிய பாதுகாப்பு கல்லூரி பிரதிநிதிகள் இலங்கையில் பேச்சு







மூலோபாய சுற்றுப்புற ஆய்வுப் பயணத்தைமேற்கொண்டுஇலங்கைக்கு விஜயம்மேற்கொண்டுள்ளரியர்அட்மிரல் சஞ்சய் சச்தேவா தலைமையிலான இந்திய தேசிய பாதுகாப்பு கல்லூரியின் பதினாறு பேர் கொண்ட பிரதிநிதிகள் குழுவினர்பாதுகாப்புஇராஜாங்கஅமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன், பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன மற்றும் கடற்படைய தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்தபெரேராஆகியோருடன்முக்கிய சந்திப்புக்களை முன்னெடுத்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோனுடனான சந்திப்பின் போது , குறித்த இந்திய தூதுக்குழுவின் ஏனைய செயற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவடைவதற்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன் கேர்ணல் புனீத் சுஷில் கலந்து கொண்டிருந்தார்.

அதேவேளை இந்திய தூதுக்குழுவுக்கும்பாதுகாப்புசெயலாளர் ஓய்வுபெற்றஜெனரல்குணரத்னவுக்குமிடையிலான சந்திப்பின் போது பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் இருதரப்பு பரஸ்பர விடயங்கள் தொடர்பாகக்கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன் போது ஜெனரல் குணரத்ன இந்திய தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் தான் தங்கியிருந்த காலத்தின் நினைவுகளையும் இதன்போது நினைவு கூர்ந்தார்.

மேலும் அவர், 63 ஆவது இந்திய தேசிய பாதுகாப்பு கல்லூரியின் பாடநெறி அங்கத்தவர்கள் மற்றும் வெளிநாட்டு பங்கேற்பாளர்களுக்கு அவர்களது எதிர்கால முயற்சிகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மேலும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவுடனான சந்திப்பின் போது , சுமூகமான கலந்துரையாடல் இடம்பெற்றதோடு, நினைவுப் பரிசுகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# இந்து - பௌத்த மக்களுக்கு இடையில் மத மோதலை உருவாக்கும் நோக்கில் எதிர்க்கட்சிகள் நிகழ்ச்சி நிரல்

## பிரசன்ன ரணதுங்க சாடல்



இந்து மற்றும் பௌத்த மக்களுக்கு இடையில் மத மோதலை உருவாக்கும் நோக்கில்எதிர்க்கட்சிகளின்அரசியல்நிகழ்ச்சி நிரல் செயல்படுத்தப்படுவதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சரு மான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இத்தகைய மோதலை உருவாக்கு வதன் மூலம் இந்தியாவின் ஆதரவை தடுத்து நிறுத்த முடியும் என எதிர்க்கட்சிகள் நினைத்து வருகின்றன எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

எனவே, இந்த விடயத்தை மிகவும் புத்திசாலித்தனமாக எதிர்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கம்பஹா லக்சியனே மதுரவில் நடைபெற்ற கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு -

**கேள்வி:** இதுவரை, நாட்டின் அபிவிருத்தி நிறுத்தப்பட்டுள்ளது. சமீபத்திய நிலை என்ன?

**பதில்:** கொரோனா தொற்று காரணமாக நாடு ஓரளவு பின்னடைவை சந்தித்துள்ளது. நாட்டுக்கு முதலீடுகள் வரவில்லை. அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. ஆனால் இப்போது நிலைமை வேறு. முதலீட்டாளர்கள்நாட்டுக்குவருகிறார்கள்.அபிவிருத்திப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டுக்குள், அதாவது பட்ஜெட்டுக்குப் பிறகு, நாடு இயல்பு நிலைக்குத் திரும்ப முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**கேள்வி:** அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டு. தேர்தல் நடத்தப்படுமா? அந்த அபிவிருத்திப் பணியை உங்களால் செய்ய முடியுமா?

**பதில்:** தேர்தல் என்பது வேறு வியம். கடந்த காலங்களில் விடுபட்ட பணிகளை புதுப்பிக்கும் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். உதாரணமாக, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குஅனைத்துஎம்.பி.க்களும்கட்சி வேறுபாடின்றி அழைக்கப்பட்டுள்ளனர். அந்த வேலையைப் பற்றி பேசுங்கள். முதலில் கிராமத்தில் உள்ள மக்களின் தேவைகளைக் கண்டறிய வேண்டும். அவைஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் பேசப்படவேண்டும். மற்றபடிகொழும்பின் அறைகளுக்குள் இருந்து கொண்டு செய்யப்படும் அபிவிருத்தி திட்டங்கள் கிராமத்துக்கு பிரயோசனம் இல்லை. எனவே, ஓர் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

**கேள்வி:** மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் இடையில் சில முரண்பாடுகள் காணப்படுகின்றன எனக் கூறப்படுகிறது.

**பதில்:** இல்லை, அரசாங்கம் மற்றும் மாகாண சபைகள் அனைத்தும் ஒரே முறையைப்பின்பற்றவேண்டும், கிராமியக் குழுவின் கருத்துக்களுக்கு ஏற்ப மத்திய அரசாங்கமும் மாகாண சபைகளும் திட்டங்களைநடைமுறைப்படுத்த வேண்டும். அதனால் யாருக்கும் பிரச்சினை இல்லை.

**கேள்வி:** மாகாண சபைகள் அதிகபட்ச அதிகாரங்களைக் கேட்கின்றன. அப்படி செய்தால் பின்னர் பிரச்சினைகள் ஏற்படும் தானே?

**பதில்:** மாகாணத்தின் தேவைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அந்த மாகாண சபைகளைமக்கள்நிராகரிப்பார்கள். எனவே, இந்த நிறுவனங்கள் அரசின் கொள்கை கட்டமைப்பிற்குள் செயற்பட வேண்டும். அதன்பிறகுஎந்தபிரச்சினையும்இருக்காது.

**கேள்வி:** மாகாண சபை ஒரு வெள்ளை யானை. ஆனால் அது நிராகரிக்கப்படாது.

**பதில்:** எந்த வேலையும் செய்யாவிட்டால்மாகாணசபைவெள்ளையானை. நாம் அதை வேலை செய்யும் நிலைக்கு கொண்டுவரவேண்டும். நிர்வாகஅதிகாரம் பிரிக்கப்பட்டால் அந்த மாகாண மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும். நான் மாகாண சபையில் இருந்த போதும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் சில சந்தேகங்கள் எழுந்துள்ளன எனக் கூறினேன். அவநம்பிக்கையுடன் வேலைக்குச் சென்றால் பிரச்சினைகள் வரும். எனவே, அந்த இரண்டையும் ஒதுக்கிவைத்துவிட்டுமற்றஅமைச்சுகளின் நிர்வாக அதிகாரங்களை பிரிக்கும் திட்டத்தை முன்வைத்துள்ளோம். அதை எப்படி செய்வது என்று கலந்தாலோசிக்க ஒரு திட்டம் தேவை.

**கேள்வி:** மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வு மோதலுக்கு வழிவகுக்கும், இல்லையா? திருகோணமலையிலும் சில பிரச்சினைகள் இருப்பதை பார்த்தோம்.

**பதில்:** சிலர் இந்தநாட்டில் அவ்வப்போது நெருக்கடிகளை உருவாக்குகிறார்கள். தற்போது மதங்களுக்கு இடையே பிரச்சினைகள் தொடங்கியுள்ளன. ஈஸ்டர் தாக்குதல் என்பது கிறிஸ்தவ தேவாலயங்களை குறிவைத்து சில முஸ்லிம் குழுக்கள் நடத்திய தாக்குதல். இப்போது இந்து-பௌத்த மோதலை உருவாக்க முயற்சிக்கின்றனர். எதிர்க்கட்சிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரல் இந்தியாவிடம் இருந்து எங்களின் ஆதரவை நிறுத்தும் வகையில் செயல்படுகிறது. பிரதமர் மோடி ஓர் இந்து. அதனால்தான் சிலர் மத மோதலை உருவாக்க முயற்சிக்கின்றனர். இந்தப் பிரச்சினையை நாம் மிகவும் புத்திசாலித்தனமாக எதிர்கொள்ள வேண்டும்.

**கேள்வி:** அனைவரும் தேர்தல் கேட்கிறார்கள். தேர்தலை தள்ளி வைப்பது ஏன்?

**பதில்:** நாம் அரசமைப்பின் படி செயற்பட்டுள்ளோம். உரிய காலத்தில் தேர்தலை எதிர்கொள்வோம்.

**கேள்வி:** சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை அடுத்த வாரம் விவாதிக்கப்படவுள்ளது. அதை எதிர்கொள்ள அரசு தயாரா?

**பதில்:** நாம் அடுத்த மாதம் 6, 7, 8 ஆகிய மூன்று நாள்களை நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிப்பதற்கு ஒதுக்கியுள்ளோம். நாங்கள் அதற்கு முகம் கொடுக்கவுள்ளோம். சுகாதார அமைச்சில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. இது 100 சதவீதம் சரி என்று நாங்கள் கூறவில்லை. ஆரோக்கியம் என்பது மக்களுக்கு மிகவும் முக்கியமான வியம். நாட்டில் மருந்துகள்இல்லைஎன்று தொழிற்சங்கங்கள் சில அரசுக்கு எதிரான சித்தாந்தத்தை உருவாக்கின. இதற்கு யார் காரணம் என்பதை விவாதத்தில் பார்க்கலாம்.

**கேள்வி:** இதை வெற்றி கொள்ள முடியுமா?

**பதில்:** ஆம்... வெற்றி பெறுவோம்.

**கேள்வி:** அடுத்த தேர்தலை இலக்காகக் கொண்டு டலஸ்-அநுர சமாதானப் பேச்சு நடந்து வருகிறது. உங்களுக்கெல்லாம் என்ன நடக்கும்?

**பதில்:** ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒரு பலமான கட்சி. தம்மால் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பது எதிர்க்கட்சிகளுக்கு தெரியும். கொரோனா தொற்றுநோய் மற்றும் ரஷ்ய-உக்ரைன் போரால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை சாதகமாகப்பயன்படுத்திக்கொண்டு சிலர்போராட்டத்தைஉருவாக்கிமொட்டுக்கு அடித்தனர். எங்கள் உறுப்பினர்கள் அடித்து தரையில் இழுத்துச் செல்லப்பட்டனர். 80 எம். பி. களின் வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இவை ஓர் அமைப்பினரால் நடத்தப்பட்ட வியங்கள். நாங்கள் கட்சியாக ஓர் அமைப்பை உருவாக்கும் போது மீண்டும் நெருக்கடியை ஏற்படுத்த சிலர் முயற்சித்தார்கள். அதனையும்எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**கேள்வி:** யார் சேர்ந்தாலும் மொட்டு வெல்லும் என்று நீங்கள் கூறுகிறீர்களா?

**பதில்:** ஜனாதிபதி தேர்தலில் மொட்டை ஆதரிக்கும் வேட்பாளர் வெற்றி பெறுவார். பொதுத் தேர்தலில் போட்டியிட கூட்டணி அமைக்க பேச்சு நடைபெறுகிறது. அது வெற்றி பெற்றால் பொதுத் தேர்தலில் வெற்றி பெறலாம்.

**கேள்வி:** ஈ.ரி.எவ்., ஈ.பி.எவ். பிரச்சினை ஓடிக்கொண்டிருக்கிறது. அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது?

**பதில்:** அது ஒரு பிரச்சினையல்ல. அந்த உறுப்பினர்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாத வகையில் நாடாளுமன்றம் சட்டங்களை இயற்றியுள்ளது. அப்படிச் செய்யாவிட்டால், வங்கி அமைப்பு சீர்குலைந்துவிடும். கோட்டாபய ராஜபக்ஷ, நிர்வாகத்தில்அனுபவம்இல்லாததால் அவர் வலையில் சிக்கினார். இப்போது ஓர் அனுபவமிக்க தலைவர் இருக்கிறார்.

**கேள்வி:** கம்பஹாமாவட்டத்தில்வன்முறைக் குழுக்கள் ஒன்று செயற்படுகின்றது.

**பதில்:** கோட்டாபய ராஜபக்ஷ பாதாள உலகத்துக்கும் போதைப்பொருளுக்கும் எதிரான போராட்டம் ஒன்றை முன்னெடுத்ததன் காரணமாகவே பதவி விலகச் செல்ல நேர்ந்தது. அந்த கடத்தல்காரர்கள் தான் மூன்றுமாதங்களாகபோராட்டத்துக்கு பிரியாணி சாப்பிடக் கொடுத்தார்கள். இந்த கடத்தல்காரர்கள் கப்பம் வாங்குகிறார்கள். சாமானிய மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்க, இதை கட்டுப்படுத்த வேண்டும்.

**கேள்வி:** அரசாங்கத்தால் அதைச் செய்ய முடியுமா?

பதில்: நாங்கள் அடக்குகிறோம், எதிர்க்கட்சி பாதாள உலகத்துக்காக நிற்கிறது. (05)

# சிறுதொழில் முயற்சியாளர்களுக்கென வடக்கில் உரிய சபை ஒன்று வேண்டும்

## யாழ். மாவட்ட அரச அதிபர் வலியுறுத்து



வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற சிறுதொழில் முயற்சியாளர்களுக்கென ஒரு சபை அமைக்கப்பட்டு, அது அங்கீகாரம் பெறப்பட்ட ஒரு நிறுவனமாக மாற்றப்பட வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார். 'யாழ் முயற்சியாளர் -2023' விற்பனைக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராககலந்துகொண்டுஉரையாற்றும்போதே மாவட்ட செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் -

கடந்த மூன்று மாதங்களாக இந்த சுற்றாடலிலே பிரதி ஞாயிற்றுக்கிழமைகளிலும்உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான ஒரு சந்தைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அது பிரபலமாகி இந்த இடத்தில் ஞாயிற்றுக்கிழமை போனால் இந்த பொருளை வாங்க முடியும் என்ற நிலை உருவாகி இருக்கிறது.

இந்த நிலைமை இன்னும் சிறப்பாக அபிவிருத்தி அடைந்து வாடிக்கையாளர்கள் யாழ்ப்பாண நகரத்திலே உள்ளூர் உற்பத்தி பொருள்களைக் கொள்வனவு செய்கின்ற ஓர் இடமாக இந்த இடத்தை தெரிவு செய்கின்ற அளவுக்கு காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படவேண்டும் என்கின்ற எங்களுடைய எதிர்பார்ப்பு ஓரளவு நிறைவேறிக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கின்ற முயற்சியாளர்கள் ஒன்றிணைந்து முயற்சியாளர்களுக்கிடையிலான ஓர் அமைப்பை உருவாக்கி இருக்கிறார்கள். அது ஓர் ஆரம்ப கட்டத்திலேயே இருக்கிறது.

எதிர்காலத்தில் அது பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டு முயற்சியாளர்கள் தங்களுக்கு இடையேசிறந்தஆரோக்கியமான கட்டமைப்பைஏற்படுத்திதொழில் முயற்சியை பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று இவ்விடத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், எங்களுடைய உள்ளூர் உற்பத்திகள் சுகாதார ரீதியான, தரம் கூடிய சிறந்த உற்பத்திகளாக இருக்கின்றன. இருந்தாலும், நாங்கள் தேசிய, சர்வதேச ரீதியாக இன்றைக்கு இருக்கிற எங்களுடைய போட்டி சந்தைக்கேற்ப இன்னும் பல முன்னேற்றங்களை காண வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அந்த திணைக்களத்தில் இருக்கக்கூடிய ஆய்வுப் பிரிவுகள், அவற்றோடு யாழ்ப்பாணபல்கலைக்கழகத்தில் உள்ள பொருளியல் துறை பிரிவு, உயிரியல் துறை பிரிவு மற்றும் விவசாயப் பிரிவு போன்ற பிரிவுகள் இவ்வாறான உற்பத்தியாளர்களின் நிலையங்களை தங்களுடைய வெளிக்கள பயிற்சிக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த உற்பத்தியாளர்களை முன்னேற்றுவதற்கான வியூகங்களையும், பல்கலைக்கழக மாணவர்களையும் இவர்களோடு இணைத்து எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறுகின்றமாணவர்களும் இவ்வாறான துறைகளில் முன்னேறுவதற்கு வாய்ப்புகளை உருவாக்கிக்கொடுக்கவேண்டும்.

இங்கே இந்தகண்காட்சியை சுற்றிப் பார்க்கின்றபோது நான் ஒன்றை கவனித்தேன். மிகவும் வயதான அனுபவமிக்க சுமார் 15 வருடங்களுக்கு மேல் தொழில் முயற்சியில் ஈடுபடுகின்ற முயற்சியாளரை இங்கே காண்கின்றேன்.

அதுமட்டுமன்றி, பல்கலைக் கழகத்தில் பி. எஸ்.சி. கற்கை நெறியினை முடித்துவிட்டு, இவ்வாறான முயற்சிகளில் சமீப காலமாக ஈடுபட்டு வருகின்ற இளைஞர்களையும் காண்கின்றேன்.

இவர்களில் நூற்றுக்கு 75 வீதமானவர்கள் பெண்களாக இருக்கின்றார்கள். ஆகையால், இதுஅவர்களதுவாழ்வாதாரத்தை தாண்டி, பல்வேறு தரப்பினருக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதாகவும் இருக்கிறது.

தொழிலுக்கான அங்கீகாரம் கிடைக்க வேண்டும்; தொழில் செய்பவர்களுக்கான தனித்துவம் சந்தையிலே காணப்பட வேண்டும். ஆகையால், உற்பத்தி முயற்சியாளர்கள் துறை சார்ந்த அனுபவம், அறிவு, ஆற்றல் என்பவை சான்றுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

மாகாண ரீதியாக பார்க்கின்றபோதுவடக்குமாகாணத்தில் இருக்கின்றசிறுதொழில்முயற்சியாளர்களுக்கென ஒரு கவுன்சில் அமைக்கப்பட்டு, அங்கீகாரம் பெறப்பட்ட நிறுவனங்களாக மாற்றப்பட வேண்டும்.

இன்றைக்கு இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலானதொடர்புவாராந்தம் வருகின்றகப்பல்சேவை, விமான சேவை மூலம் பேணப்படுகிறது. அங்கிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள் எங்களது உற்பத்திகளை விரும்புகின்ற அளவுக்கு, எமது பொருள்களின் தரம் குறையாமல் இருக்க வேண்டும்.

நல்லூர் கந்தனுடைய திருவிழா காலத்தில் இந்த விற்பனைக் கூடம் அமைக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக உங்களுக்கு நல்ல சந்தை வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றேன் எனத் தெரிவித்தார். (05)

# கெஹலியவுக்கு எதிரான பிரேரணையை தோற்கடிக்க ஜனாதிபதி ரணில் முயற்சி

## எஸ்.எம்.மரிக்கார் குற்றச்சாட்டு



சுகாதார அமைச்சர் கெஹெலியவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக ஆளுந்தரப்பின் எம்.பி.க்களை அடுத்த வாரம் வெளிநாட்டு பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியிருக்கின்றார்.

நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றி பெற்றாலும், தோற்கடிக்கப்பட்டாலும் உண்மையான மக்கள் பிரதிநிதிகள் யார் என்பது அந்த சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாமல் ராஜபக்ஷவும் திஸ்ஸ குட்டியாராச்சியும் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று கோருகின்றனர். எதிர்க்கட்சியினரைப் போன்று அவர்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

மேடைகளில் பொய் கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் இவர்களுக்கு உண்மையில் தேர்தல் வேண்டுமென்றால் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியிடம் சென்று நேரடியாகக் கூற முடியுமல்லவா?

தேர்தலின் பின்னர் ஏற்படப் போகும் விளைவுகளை அறிந்தா அல்லது அறியாமலா அவர் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கின்றார் என்பது விளங்கவில்லை.

எதிர்காலத்தை பற்றி மாத்திரமின்றி, நிகழ்காலம் குறித்தும் நம்பிக்கை இன்றியே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மக்கள் தமது கோபத்தை வெளிப்படுத்துவதற்கு தேர்தலையே கோருகின்றனர்.

நாட்டுக்காகஉழைத்து ஓய்வு பெற்றுள்ள அரச உத்தியோகத்தர்களின் வட்டி வீதம் குறித்து அவதானம் செலுத்துமாறு மத்திய வங்கி ஆளுநரிடம் வலியுறுத்துகின்றோம்.

மக்கள் இவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளசந்தர்ப்பத்தில் ஆளுந்தரப்பின் எம்.பி.க்களை வெளிநாடுகளுக்குசெல்லவேண்டாம் என்று ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

சுகாதார அமைச்சர் கெஹலியவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காகவே அவர் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

தரக்குறைவான மருந்துகளை இறக்குமதி செய்து மக்கள் கொல்வதற்கு உதவுபவர்கள் யார் என்பதை அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போதுபுரிந்துகொள்ளலாம். நாட்டு மக்களைக் காட்டிக் கொடுக்க வேண்டாம் என்று அவர்களை வலியுறுத்துகின்றோம்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரானநம்பிக்கையில்லா பிரேரணையில் நாம் தோற்றாலும், வெற்றி பெற்றாலும் உண்மையான மக்கள் பிரதிநிதிகள் யார் என்பதை எம்மால் வெளிக் கொண்டு வர முடியும்.

பொதுவெளியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படாவிட்டாலும், மக்கள் மனதுக்குள் பாரிய போராட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. தேர்தலின்போது அவர்கள் அதை வெளிப்படுத்துவார்கள். - என்றார்.(05)

# வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் தர அமைச்சரவை ஒப்புதல்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தகவல்



வடக்கு, கிழக்கில் நீண்ட காலமாக பணியாற்றி வருகின்ற தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புக்கொண்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் சுமார் 60 ஆசிரியர்களும், கிழக்கு மாகாணத்தில் சுமார் 187 ஆசிரியர்களும் நீண்டகாலமாக நிரந்தரநியமனமின்றிதொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

குறித்ததொண்டர்ஆசிரியர்களின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, தமக்கான நிரந்தர நியமனத்தை பெற்றுத் தருமாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அது தொடர்பாக ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ், கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவையில் பிரஸ்தாபித்ததுடன் நிரந்தரநியமனங்கள்வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திய நிலையில், அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

### சர்வதேசத்....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

சர்வதேசத்தின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட காணாமலாக்கப்பட் டோருக்கான அலுவலகமானது, செயல்திறனற்றது, அது எமக்கு வேண்டாம் என்று பாதிக்கப்பட்டவர்களாகிய நாம் ஆதாரத்துடன் நிரூபித்த பின்பும்கூட அந்த அலுவலகம் எமக்கான நீதியை வழங்கும் என்று கூறுவதும் அந்த அலுவலகத்தை எம் மீது திணிக்க குறுக்கு வழிகளைக் கையாள்வதும் மனவேதனைக்குரியது. கொலையாளியிடமே கொலைக்கான நீதியை வழங்கும் பொறுப்பைக் கொடுப்பது எந்த வகையில் நியாயம்? உள்ளகப் பொறிமுறையை எம் மீது திணிக்க முயலும் நாடுகள் தமது நாட்டில் அல்லது தமது அன்பிற்குரியவர்கள் வாழும் நாட்டில் இப்படி நடந்துகொள்வார்களா?

இலங்கையில் 1958 முதல் தமிழர் மீதான இனவழிப்பும், வலிந்து காணாமல் ஆக்கப்படுதலும் நடந்தேறிய வண்ணம் உள்ளன. 2009 இறுதிக்கட்ட போரின்போது மட்டும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோரை படுகொலை செய்தும் 20 ஆயிரத்திற்கு மேற்பட்டோரை வலிந்து காணாமலாக்கியும், பல்லாயிரக்கணக்கானோரை ஊனமுற்றவர்கள் ஆக்கியும் தமிழினத்தை துவம்சம் செய்த சிறிலங்கா அரசுக்கு எவ்வித கண்டனத்தையும் தெரிவிக்காத சர்வதேசம், கொலையாளியையே நீதிபதியாக்க கடும் பிரயத்தனப்படுவது ஏன்?

பாதிக்கப்பட்டவர்கள் கேட்பதற்கு நாதியற்ற தமிழர்கள் என்பதாலா? ஆனால் சிரியா, உக்ரைன் போன்ற நாடுகளில் போர் நடைபெற்றுக்கொண் டிருக்கும்போதே பல நாடுகள் கண்டனங்களைத் தெரிவிப்பதும் எவ்வித தாமதமும் இன்றி உடனடி நடவடிக்கைககளை எடுப்பதும் எம்மை ஆச்சரியப்படவைக்கிறது. ஏன் இந்தப் பாரபட்சம்?

***ஐக்கிய நாடுகள் சபையின் பதில்***

ஐநா மனித உரிமைகளுக்கான உயர்ஆணையர் மிசெல்லேபச்லெட், 2021 ஜூன் மாதம் தனது அறிக்கையில், காணாமலாக்கப் பட்டவர்களுக்கான அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவற்றுக்கான சமீபத்திய நியமனங்கள் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை வலுவிலகச் செய்வதாகவும், காணாமல்போனவர்கள் தொடர்பான விசாரணைகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவும் தெரிவித்தார்.

நீதியை அடைவதற்கு, சுதந்திரமான சர்வதேச பொறுப்புக்கூறல் செயல்முறை மட்டுமே போதுமானது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பரப்படுத்துவதன் மூலமே நீதியை பெற்றுக்கொள்ள முடியும் என்ற ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையும் , முந்தைய மனித உரிமைகள் ஆணையாளர்கள், சிறப்பு அறிக்கையாளர்கள் மற்றும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழு உட்பட பல ஐ.நா அதிகாரிகளால் வழிமொழியபட்டதையும் இதில் சுட்டி காட்ட விரும்புகின்றோம்.

ரோம் சாசனத்தில் கைச்சாத்திடாத வடகொரியா, சிரியா, ரஷ்யா, மியன்மார் போன்ற நாடுகளைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி நீதிதேட வழிமுறைகளை கண்டறிய முடிந்த சர்வதேச சமூகம், சிறியநாடான சிறிலங்காவை நீதியின் முன் நிறுத்த பின்னாடிப்பதின் காரணத்தை எம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. அத்துடன் சிறிலங்காவின் பொருளாதார நிலையை சீர்படுத்த முயலும் நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் மீண்டும் ஒரு மனிதப் பேரழிவு, இனவழிப்பு இந்த மண்ணில் நிகழாமையை உறுதிசெய்ய வேண்டும். சிறிலங்கா அரசு ரோம் சாசனத்தில் கைச்சாத்திடுவதை முன் நிபந்தனையாக முன்வைக்க வேண்டும்.

சிறிலங்கா அரசுக்கு அவகாசம் கொடுத்து காலத்தை இழுத்தடித்ததன் மூலம் 180 இற்கும் மேற்பட்ட பெற்றோரை இழந்து, கண்கண்ட நேரடியான சாட்சிகள் 180 பேர் அழிந்ததுதான் மிச்சம். மீண்டும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (ரிஆர்சி - TRC) என்ற பெயரில் வேறோர் உள்ளகப் பொறிமுறையை எங்கள் மீது திணித்து கால இழுத்தடிப்புக்குத்துணைபோவதன் மூலம் மிகுதியுள்ள நேரடி சாட்சிகளான எங்களையும் இறக்கவிட்டு சாட்சிகள் அழிவதற்குத் துணை போகாமல் எங்களின் கோரிக்கையான சர்வதேச விசாரனை ஒன்றின் மூலம் ஞூளீக்கு அல்லது விசேட தீர்ப்பாயம் ஒன்றின் மூலம் எங்களுக்கு விரைவான நீதியைப் பெற்றுத்தர சர்வதேசமும் ஐ.நாவும் முன் வரவேண்டும் என்று இந்த சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் மீண்டும் ஒரு தடவை எமது கோரிக்கையை முன் வைக்கின்றோம்.

***சர்வதேச குழுவை நியமிக்கவும்***

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் என்ற வகையில், எங்களின் அன்புக்குரியவர்களின் அவலநிலையை சுயாதீனமாக ஆராய்வதற்காக சர்வதேச பிரமுகர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிக்குமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம். இதன் மூலம்தான் அவர்கள் காணாமல் போன சம்பவத்தின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக்கொண்டுவர முடியும்.

அத்துடன் இன்று வரை தொடர்ந்து நிகழ்ந்து வரும் இனவழிப்பும் பௌத்தமயமாக்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இந்நிலை மாறி தமிழ் மக்கள் நிம்மதியாக வாழவும் இத்தீவில் அமைதி நிலை ஏற்படவும் ஓர் நிரந்திர அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும். இத்தீர்வானது வடக்கு கிழக்கு மாகாணங்களை தாயகமாக கொண்ட மக்களிடையே சர்வதேசத்தினால் நடாத்தி கண்காணிக்கப்படும் சர்வசன வாக்கெடுப்பினூடக தீர்மானிக்கப்படவேண்டும்- இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com





பிந்திய செய்தி

போதைப் பொருள் கடத்துவதற்கு

# வாகனத்தில் ரகசிய அறை சந்தேகத்தில் 5 பேர் கைது







(ந.லோகதயாளன்.)

மாதகல், உரும்பிராய் பகுதிகளில் போதைப் பொருள் கடத்தலில ஈடுபட முயன்றதான சந்தேகத்தில் ஐவர் கைதுசெய்யப்பட்டதோடு அவர்களிடம் இருந்து ஒரு கோடியே 50 லட்சம் ரூபாபணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படையினரின் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் யாழ்ப்பாணம் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து யாழ்ப்பாணத்தில் சந்தேகத்திற்குரிய வகையில் நடமாடிய வாகனம் ஒன்றைச் சோதனை செய்தனர். அதில் இரகசிய அறை ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. அந்த வாகனம் போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்கிற சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து அதனைக் கைப்பற்றிய அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்தனர். வாகனத்தில் இருந்த மூன்று பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில், மூவரில் இருவர் தனமல்வில பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் உரும்பிராயைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

இவர்கள் கேரள கஞ்சா வாங்குவதற்காக மாதகல் பகுதியில் வசிக்கும் ஒருவருக்கு இரண்டு கோடியே முப்பத்தொரு லட்சம் ரூபாயும், உரும்பிராயில் வசிப்பவருக்கு 55 லட்சம் ரூபாயும் வழங்கினர் என்று கூறப்படுகின்றது.

3 மணிநேரம் நடத்திய விசாரணை மூலம் கிடைத்த தகவலின்படி உரும்பிராய் பகுதியில் உள்ள ஒருவரின் வீட்டில் இருந்து 55 லட்சம் ரூபாய் பணமும் மறைத்து வைக்கப்பட்டிருந்த 95 லட்சம் ரூபாயும் மீட்கப்பட்டன.

இதனையடுத்து மதகல் பகுதியைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் இருந்து இந்தக் கடத்தல் நடவடிக்கைகளில் தொடர்புபட்டவர்கள் என்று கருதப்பட்ட மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட 5 பேரும் கடத்தல் நடவடிக்கைகளுக்காகப' பயன்படுத்தப்பட்ட வாகனம் மற்றும் ஒருகோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் பணம் மோட்டார் சைக்கிள் என்பன மேலதிக விசாரணைகளுக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.08.2023இல் வெளியிடப்பெற்றது.